பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 17 புதன்கிழமை 04.10.2023 கதிர் 327




சீனக்கப்பல் விவகாரம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. செப்டெம்பர் இறுதி வாக்கில் இலங்கையை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்ட அந்தக் கப்பல் வந்து சேரவில்லை. அதன் பயணத்தை ஒக்டோபர் வரையும் தாமதிக்கும்படி இலங்கை விடுத்த கோரிக்கையின்படி அதன் பயணம் மீளமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அது எப்போது இலங்கைக்குள் வரும் என்று இன்னமும் உறுதியாகவில்லை. என்றாலும் அந்தக் கப்பல் ஏற்கனவே இந்து மா கடல் பகுதிக்குள் நுழைந்து விட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

ஷியாங்-6 கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பில் வழங்கப்படும் அழுத்தம் கொஞ்ச நஞ்சமல்ல. இந்திய மட்டுமல்ல ☞ 2

## யாழ்ப்பாணத்தில் இன்று காலை

# அச்சுறுத்தல்களை எதிர்த்து மனிதச் சங்கிலிப் போராட்டம்

### அடக்குமுறையைத் தகர்க்க அனைவரையும் திரள அழைப்பு

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர்அச்சுறுத்தலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இன்று மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்தப் போராட்டத்திற்கு தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை வீதியில் மருதனார் மடம் முதல் யாழ்ப்பாணம் வரை இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம் பெறவுள்ளது.

இன்றைய மனித சங்கிலிப் போராட்டம் வெற்றி அளிப்பதற்கு தமிழ் மக்கள் தங்கள் பூரணமான ஆதரவை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் ☞ 2

## சுனாமி ஒத்திகை பயிற்சி இன்று

திருகோணமலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கரையோர மக்களினதும் பாடசாலை மாணவர்களினதும் தயார்நிலையை பரிசோதிப்பதற்காக பிராந்திய சுனாமி ஒத்திகை பயிற்சியொன்று இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் அறிவித் தார்.

அதற்கமைய, பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் இலங்கையினுள் தாபிக்கப்பட்டுள்ள ☞ 2

சமூக ஊடகங்களுக்கானது

# சர்வதேச உடன்படிக்கையா உள்நாட்டுச் சட்டமா தேவை?

### கலந்துரையாட வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதா அல்லது நாட்டின் சட்டத்திற்கு அமைவாக செயற்படுவதா என்பது தொடர்பில் சமூக ஊடகங்கள் உட்பட இந்நாட்டின் அனைத்து ஊடகங்கள் தொடர்பிலும் கலந்துரையாட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரான 'திவயின' பத்திரிகையின் ஆரம்ப ஆசிரியரும் ஆசிரியர் பீடப் பணிப்பாளருமான எட்மண்ட் ரணசிங்கவை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் ஊடகத் துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களை ☞ 8

## முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகலுக்கு இந்த ஆட்சி எதுவிதத்திலும் பொறுப்பல்ல

### விடயத்தை திரிக்கவேண்டாம் என்கிறார் நீதி அமைச்சர்

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆட்சியாளர்களுக்கோ கோ ஜனாதிபதிக்கோ எந்த அதிகாரமும் இல்லை. ஆகவே அதந்த விடயத்தினை இந்த ஆட்சியின் பொறுப்பாகத் திரிவுபடுத்த வேண்டாமென நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையி ☞ 2

## நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை எதிர்த்து உடன் நீதிமன்றில் வழக்கு

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கு எதிராக சமூக ஆர்வலரும் சுயாதீன ஊடகவியலாளருமான தரிந்து உடுவரகெதரவினால் உயர் நீதிமன்றத்தில் நேற்றையதினம், அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில், சட்டமூலத்தின் சில விதிகள் இலங்கையின் அரசமைப்பிற்கு முரணாக உள்ளதாகவும் அச்சட்டமூலத்தின் விதிகள் பேச்சு ☞ 8

## நீதிபதி விவகாரத்தில் விசாரணை வேண்டும்

### சஜித் பிரேமதாச வலியுறுத்து

முல்லைத்தீவு நீதிவான் நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகலுக்கான காரணம் தொடர்பில் சுயாதீன விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவிவிலகல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன் வைத்தபோதே அவர் மேற்கண்டவாறு ☞ 2

முல்லைத்தீவு நீதிபதி விவகாரம்;

## நீதி அமைச்சர் – சுமந்திரன் இடையே நேற்று சபையில் வாதப் பிரதிவாதம்

நாட்டை விட்டு வெளியேறிய முல்லைத்தீவு மாவட்ட திமன்ற நீதி பதி ரி.சரவணராஜா தொடர்பில் இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் இடையில் வாதப்பிரதவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி உரையாற்றியபோது, முல்லைத்தீவு ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலில் நாமல்: கேள்விக்கு அவரளித்த பதில்

தந்தைமாருக்கு மகன்கள் சிறியவர்கள் தான் என்று பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுகப்பினர் நாமல் ராஜாபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று உள்ளுராட்சி மன்றங்களின் முன்னாள் அங்கத்தவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களிடத்தில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் வேட்பாளராகுவதற்கு விரும்புகின்றீர்களா? உங்களது தந்தை உங்களை ☞ 8

## 56 மில்லியன் டொலர் பணம் வெளிநாடுகளில் பதுக்கி வைப்பு

நாட்டின் சக்தி வாய்ந்த நபர்களால் கடந்த சில வருடங்களில் 56 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் ☞ 2

## ரணில் ஆட்சி பற்றி கருத்துக்கூற இன்னமும் நேரம் வரவில்லை

### இப்படிச் சொல்கிறார் மகிந்த

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கான நேரம் தற்போது வரவில்லை. ஆகவே சற்றுப் பொறுத்திருந்து அதனைக் கூறுவோம் என்று பொது ஜனபெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹுனுப்பிட்டிய விகாரையில் சமய வழிபாடுகளில் நேற்றையதினம் பங்கேற்றுக் கொண்ட அவர் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு ☞ 2

# நாணய நிதியத்தின் நிபந்தனைகள் என்ன?

### எதிர்க் கட்சித் தலைவர் சபையில் கேள்வி

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஆட்சியாளர்கள் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் பகிரங்க கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் இரண்டாம் கடன் தவணையை செலுத்தாதது தொடர்பாக நிலையியற் கட்டளை 27 இரண்டில் கேள்வி எழுப்புகையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம் இரண்டாவது கடன் தவணை தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்கள் சரியான முடிவு எடுக்கப்படாமல் முடிவடைந்துள்ளது.

நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளை இந்த ஆட்சியினால் செயற்திறனோடு மேற்கொள்ள முடியாமல் போயிருப்பது ☞ 2

## செல்வந்த வரியை புதிய முறையில் கொண்டுவர உலக வங்கி பரிந்துரை

1992 இல் பயன் பாட்டிலிருந்து நீக்கப்பட்ட செல்வந்த வரியை பொருத்தமான புதிய முறையில் மீண்டும் அமுல்படுத்த வேண்டுமென உலக வங்கி பரிந்துரை செய்துள்ளது.

இலங்கை தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள உலக வங்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

"2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கான அறிகுறிகள் காணப்பட்டாலும், அது வெற்றிகரமான கடன் மறுசீரமைப்பு செயன்முறை மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களைச் சார்ந்துள்ளது.

அபிவிருத்தி, வர்த்தக பொருளாதாரம் கொண்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் வரிச் செயற்பாடுகள் மிகவும் குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றன. எனினும், நாடு பணவீக்கத்தை குறைப்பதில் முன்னேற்றம் ☞ 8

## இனி இது .....

அமெரிக்கா, ஜப்பான் போன்ற பல நாடுகளும் இந்தக்கப்பலின்வருகைக்கு எதிராக அழுத்தமாகக் குரல் எழுப்புகின்றன. அது கொஞ்ச நஞ்ச எதிர்ப்பல்ல. ஆனால் இலங்கையோ எங்களுக்கு இந்தியாவும் வேண்டும் அதேநேரம் சீனாவும் வேண்டும், நாம் யாருக்கும் அடிமைப்பட்ட நாடல்ல, இறைமையுள்ள சுதந்திரமான நாடு என்ற நிலைப்பாட்டையே அந்த நாடுகளுக்கு உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் கப்பல் விவகாரம் மற்றும் இந்தியாவை உள்ளடக்கிய இந்து மா கடல் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து தீவிரமாகக் கவனம் செலுத்த இந்தியா ஒரு குழுவை இலங்கைக்கு அனுப்பவுள்ளது என்றும் அறிய முடிகின்றது. இந்த மாதநடுப்பகுதியில்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவிற்குச் செல்கிறார். அவரது பயணம் முடியும் போது இந்த இந்தியக் குழுவும்இலங்கைக்குவரும். ஜனாதிபதியின் சீனப் பணம் வரை கப்பல் விவகாரத்தில் மென்போக்கைக் கடைப்பிடிக்கவும் அது முடிந்ததும் விரைந்து தமது நிலைப்பாட்டை கடினமாக்கிக் கொள்வதற்கும் புதுடில்லி தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இந்தியப் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் தீவிர நிலைப்பாடுகளை வெளிப்படுத்தவுள்ளஇந்தியக் குழு கப்பல் தொடர்பிலும் கடுமையானநிலைப்பாட்டை எடுக்கும்என்றுதெரிகின்றது. இந்தப் பின்னணியில், இப்போது சீன ஆய்வுக் கப்பலான ஷியான் -6 கப்பலுடன் இணைந்து மேற்கொள்ளவிருந்த ஆய்வு நடவடிக்கைகளில் இருந்து ருஹுணு பல்கலைக்கழகம் விலகுவதாகஅறிவித்துள்ளது.

சீனக் கப்பலுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கான உடன்பாட்டின் பிரகாரம், ருஹுணு பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இரண்டு பேராசிரியர்களில் ஒருவர் நாட்டை விட்டு வெளியேறி விட்டார் எனவும் மற்றைய பேராசிரியர் பல்கலைக்கழக அமைப்பை விட்டு வெளியேறி விட்டார் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

இதனால், திட்டமிட்ட ஆய்வுகளை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகருஹுணு பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளதோடு, இதுதொடர்பான உத்தியோகபூர்வமான அறிவிப்பை நாரா நிறுவனம் மற்றும் சீனா ஆகிய தரப்புக்களுக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் கூறுகின்றது. ருஹுணு பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்பிரகாரம், சீனாவின்ஆய்வுக்கப்பலான ஷியான்-6 இலங்கைக்கு ஒக்டோபர் 25இல் வருகை தரவுள்ளதாகநாராநிறுவனம் அறிவித்திருந்தது.

இந்நிலையில்பாதுகாப்பு அமைச்சு முதலில் குறித்த கப்பலுக்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தபோதும்பின்னர் இந்தியா உள்ளிட்ட இதர மேற்குல நாடுகள் கரிசனைகளை வெளியிட்டமையால், ஆய்வுக்கப்பலின் வருகை தொடர்பிலான காரணங்களைகண்டறியும் வகையில் கடற்படையினர் களஆய்வுகளைபூர்த்திசெய்து வழங்கிய பரிந்துரைகளை பாதுகாப்பு அமைச்சு வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைத்திருப்பதாக அறிவித்தது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மருதனார்மடம் சந்தியில் காலை 9 மணிக்கு ஆரம்பம் ஆகும் மனித சங்கிலி ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி முட்டாஸ் கடை சந்தியில் காலை 10 மணியளவில் நிறைவடையவுள்ளது.

அனைத்துத்தமிழ்மக்களும் கட்சி பேதங்களைக் கடந்து எமது முழுமையான எதிர்ப்பினை காட்டும் முகாமாக குறித்த மனித சங்கிலி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுமக்கள், பல்கலைக் கழக மாணவர்கள், வர்த்தகர்கள்,சிவில்சமூகபிரதிநிதிகள் ,அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்து தரப்பினரும் மனித சங்கிலி ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு அனைவரும் ஒன்றிணைத்து எமது எதிர்ப்பினை காட்டுவதன் மூலமே நீதிதுறையின் சுயாதீனம் மற்றும் நீதிபதிகளின் பாதுகாப்பினையும் உறுதி செய்ய முடியும்.

எனவே அனைவரும் அணிதிரண்டு எமது கண்டனத்தை இலங்கை அரசுக்கும்,சர்வதேச சமூகத்துக்கும் காட்டுவோம் - என்றார்.

இன்றையபோராட்டத்திற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்தக் கட்சியின் பேச்சாளர்சட்டத்தரணிசுகாஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் மற்றும் அவரது பதவி விலகல் என்பவை, சிறீலங்காவின் நீதித்துறைக் கட்டமைப்புச் சுயாதீனமாக இல்லை என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

சிறீலங்காவின் நீதித்துறை சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கும், அதே மேலாதிக்கத்தின் பெயரால்நாட்டைநாசம்செய்தவர்களையும் சூறையாடியவர்களையும் கொலையாளிகளையும்சுதந்திரமாகநடமாட வைத்துள்ள து.

இந்த விடயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் சம்பவமாக நீதிபதி சரவணராஜாவின் சுயாதீன செயற்பாட்டுக்குஇடையூறான சட்டமா அதிபரின் தலையீடு மற்றும்புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் அமைந்திருந்தன.

சிறீலங்காவின் நீதித்துறையில் அரசியல் தலையீடு, சிங்கள - பௌத்த தேசத்தின் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே சிறீலங்கா அரசால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவழிப்புக்கும் நடைபெற்றுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கும் சர்வதேச நீதி விசாரணையை எமது அரசியல் இயக்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

சிறீலங்காவின் அரச கட்டமைப்பு,நீதிகோரும்பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் அதற்காகக் குரல் கொடுத்த சட்டத்தரணிகளையும் அச்சுறுத்தி வந்ததன் தொடர்ச்சியாக இன்றுநீதிபதிக்கே அச்சுறுத்தல் விடுத்து தீர்ப்பை மாற்றக் கோரும் அளவுக்கு மோசமாகச் செயற்பட்டிருக்கிறது.

இந்த மோசமான நிலைமைக்குஎதிராகத்தமிழ்மக்கள் எழுச்சியடைய வேண்டும். இதற்கானநீதிகோரியபோராட்டங்களில் தமிழ் மக்களைக் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 56 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவ்வுரையின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நபர்களின்பணத்தைமீளக்கொண்டுவருமாறு உத்தரவிடுவதற்கான விசேட பிரேரணை ஒன்றை நான் முன்மொழிகிறேன்.

சிலநாடாளுமன்றஉறுப்பினர்களின்சிலசெயலாளர்கள் தலா150மில்லியன்அமெரிக்க டொலர்களுக்கு மேல் பதுக்கி வைத்துள்ளனர். இந்த ஆண்டு மட்டும் 9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதிகள் திரும்பக்கொண்டுவரப்பட்டால் இலங்கை மற்ற நாடுகளுக்கு செலுத்தவேண்டியஅனைத்து கடன்களையும்தீர்க்கமுடியும்.

அத்துடன், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களைநியமிக்கத் அரசியலமைப்பு பேரவை தவறியுள்ளது. புதிதாக நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் பிரகாரம்ஜனாதிபதிக்குஇலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்களை அனுப்புவதற்கு அரசியலமைப்பு பேரவை கடமைப்பட்டுள்ளது. அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்கள் தூங்குகிறார் களா? என்ற கேள்விஎழுகின்றது-என்றார்.

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவருடைய பதிலில் தெரிவிக்கப்பட்டதாவது:

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி வெளிநாடொன்றுக்கு சென்ற பின்னரே அவரிடமிருந்து நீதிச்சேவை ஆணைக்குழுவுக்குக்கடிதம் ஒன்று கிடைக்கிறது. அதில் அவருக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக தான் பதவி விலகுகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு மன அழுத்தம், அச்சுறுத்தல்இருக்குமானால் அவர் வெளிநாடொன்றுக்கு சென்றுகடிதம்அனுப்பவேண்டியதில்லை.

அத்துடன் நீதிபதி ஒருவருக்கு அச்சுறுத்தல் இருக்குமானால் அவ்வாறு அச்சுறுத்தல் விடுத்தவர் யாராக இருந்தாலும் அவரை நீதிமன்றத்துக்கு அழைப்பு விடுக்கலாம், பிடியாணை கட்டளைவிடுக்கும்அதிகாரம் அவருக்கு இருக்கிறது.

அதேபோன்று குறித்த நபருக்கு எதிராக வழக்கு தொடுக்கும் அதிகாரம் நீதிபதிக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்தாவிட்டால் அதன் பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

நீதிபதியின்பதவிவிலகல் தொடர்பிலானஎந்தப்பொறுப்பையும் ஆட்சியாளர் கள் மீது சுமத்த வேண்டாம். ஏனெனில் நீதிவான் நீதிபதிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரம், நியமன அதிகாரம் என அனைத்தும் நிர்வகிக்கப்படுவது நீதிச்சேவை ஆணைக்குழுவினாலாகும். நீதிச்சேவை ஆணைக்குழு அரசமைப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவாகும்.

அதனால் முல்லைத்தீவு நீதிவான் தொடர்பான பிரச்சினையை விசாரணை நடத்துவதற்கு ஆட்சியாளர்களுக்கோ ஜனாதிபதிக்கோ எந்த அதிகாரமும் இல்லை. அந்த அதிகாரம் இருப்பது நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு மாத்திரமாகும். எனவே யாருக்காவது இது தொடர்பில் பிரச்சினை இருக்குமானால் அவர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்குமுறைப்பாடு செய்து, அது தொடர்பில் பதில்ஒன்றைபெற்றுக்கொள்ள வேண்டும்.

பிரதம நீதியரசர் தலைமையிலான அந்த ஆணைக்குழுவுக்கு உத்தரவிடவோ அதில் தலையிடவோ எமது ஆட்சிக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆணைக்குழு தேவையெனில் அது தொடர்பில்விசாரணைநடத்தி பதில் ஒன்றை வழங்கும் - என்றார்.

## நீதி -...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல்விவகாரம்தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பின்சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்றார்.

பதிலளித்துஉரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷ நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 2020.10.20 ஆம் திகதி நாடாளுமன்ற உரை ஊடாக நீதிமன்றத்தை கடுமையாக விமர்சித்தார். உயர்நீதிமன்றம்பயனற்றது, உயர்நீதிமன்றத்தில் உள்ளவர்கள் வீடு செல்ல வேண்டும் என்று கடுமையாக விமர்சித்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர் பிள்ளையான் வழக்கு விவகாரத்தில்உயர்நீதிமன்ற நீதிபதி நவாஸ் கட்டளைப் பிறப்பித்தார் என்று இவர் (சுமந்திரன்) குறிப்பிட்டார். நாடாளுமன்ற சிறப்புரிமை ஊடாக நீதிமன்றத்தை மலினப்படுத்தினார்.இவரை போன்று எவரும் நீதிமன்றத்தைக் கடுமையாக விமர்சிக்கவில்லை. இன்று நீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பில் கருத்து தெரிவிக்கிறார்.

எம்.ஏ.சுமந்திரனை போன்று நீதிமன்ற கட்டமைப்பை பிறிதொருவர் விமர்சிக்கவில்லை. பிறிதொருவர் விமர்சித்திருந்தால் இன்று அந்த நபர் கடூழியசிறைதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பார். இவரே (சுமந்திரனை நோக்கி) நீதிமன்றத்தை மலினப்படுத்தினார் என்று கடுமையாக சாடினார்.

அதற்குப் பதிலளித்த, எம்.ஏ.சுமந்திரன் நான் குறிப்பிட்ட விடயத்துக்கு பொருத்தமற்ற வகையில் நீதியமைச்சர் உரையாற்றுகிறார். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் நீதியமைச்சர் முறையாகப் பதிலளிக்கவில்லை. நான் நீதிமன்றத்தைவிமர்சித்ததாக குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நீதிபதிகளின் பெயரை குறிப்பிட்டு நான் உரையாற்றவில்லை - என்றார்.

## ரணில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அத்துடன் ஊடகவியலாளர்களின் பல கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

கேள்வி:-நீங்கள்மீண்டும் அரசியல்அரங்கிற்கு வருகை தந்துவிட்டீர்களா?

பதில்:- களத்துக்கு வருவதும் செல்வதும் வழமைதானே. இதிலென்ன இருக்கின்றது.

கேள்வி:- ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் எப்படி உள்ளன?

பதில்:- ஆட்சியைக் கொண்டு செல்ல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. பிரச்சினைகளை தீர்ப்பதற்கான செயற்பாடுகள் தொடரப்பட வேண்டும்.

கேள்வி:- அனைவரும் ஒன்றிணையுமாறு கோரப்படுகின்றதே?

பதில்:- ஒன்றிணைவது நல்லதுதானே. அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பமுடியும்என்றால் அது சிறந்தது தானே.

கேள்வி:- மின்சாரக் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதாககூறப்படுகின்றது?

பதில்:-மின்சாரக்கட்டணம் அதிகரித்தால் அனைத்து விடயங்களிலும் அதிகரிக்கும். அது நான் உட்பட அனைவருக்கும் பிரச்சினைதான். அதனை அதிகரிக்கக் கூடாது என்பது எனது கருத்து என்றார்.

## நீதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினார்.

அதன்போது, முல்லைத்தீவுநீதிமன்றநீதிபதியின் பதவிவிலகல்பெரும்விடயம். அதேபோன்றுநீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பான பயங்கரவிடயமுமாகும். நீதிபதிவழங்கியஉத்தரவுகள் காரணமாக அவருக்கு உயிர் அச்சுறுத்தல் உட்பட பல்வேறு அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.இதுதொடர்பாக மிகவும் பயங்கரமான அறிவிப்போன்றை அவர் விடுத்திருக்கிறார். அதனால் அவரின்அறிவிப்புதொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு இதன் பின்னணியில்இருக்கும்மறைமுக சக்திகளை வெளிப்படுத்த வேண்டும் -என்றார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம்தெரியவருகிறது. நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவியைப்பெற்றுக்கொள்ள இலங்கை தனது வருமான இலக்குகளை அடைய வேண்டும் எனவும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பது தொடர்பான அரச நிர்வாகத்துடன்தொடர்புடைய இலக்குகளை அடைய வேண்டும்என்றும்நாணய நிதியத்தால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதனால் இந்த விடயங்களை அடைந்துகொள்ள என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை இந்த ஆட்சி தெரிவிக்கவேண்டும்.

சர்வதேசநாணயநிதியம் வழங்கிய நிர்வாக பிழைகள் சார்ந்த அறிக்கையின் பிரகாரம், இந்நாட்டில் ஒரு சில மேல்தட்டு குடும்பங்கள்மத்தியில்ஊழல் தலைவிரித்தாடுவதாகவும் அதிகாரம் குவிவதும், பொதுச் சொத்தை தவறாகப் பயன்படுத்துவதும், ஊழல் மிகுந்த குடும்ப ஆட்சி போன்றவற்றால் நாடு வங்குரோத்தடைந்து விட்டதாகவும்,இந்நாட்டில் இன்னமும் ஊழல் மிகு குடும்ப ஆட்சியின் நீட்சியே நடந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையின் பிரகாரம், பொதுநலன் சார் பணிகள் சரிந்து, ஊழல் எதிர்ப்புத் திட்டம் இல்லாது, சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சி கண்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் ஜனநாயகம் பலவீனமடைந்துள்ளது.

அதனால் சர்வதேச நாணயநிதியஉடன்படிக்கை நிபந்தனைகளில், பூர்த்தி செய்யப்பட்ட நிபந்தனைகள் மற்றும்பூர்த்திசெய்யத்தவறிய நிபந்தனைகள் யாது எனக் கேட்கிறோம். அதேபோன்று நாணய நிதியத்தின நிபந்தனைகள் யாவை? நிபந்தனைகளில்நிறைவேற்ற முடியாமல் போனதற்கான காரணம் என்ன? அந்த நிபந்தனைகளைநிறைவேற்ற ஆட்சியாளர்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன என கேட்கிறோம்.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளைநிறைவேற்ற இந்த ஆட்சி மேலும் கால அவகாசம் ஒன்றை கோரி இருக்கிறதா? அவ்வாறு கோரி இருந்தால் அது எந்தளவு காலம்? எந்த விடயங்களுக்கு என கேட்கிறோம். அதேபோன்று இரண்டாம் கட்ட கடன் உதவியை எந்த காலப் பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்என்பதைஆட்சியாளர்கள் தெரிவிக்க வேண்டும்.

நாட்டிலுள்ள தொழில் வல்லுனர்களிடம் இருந்து அரசு அதிக வரி அறவிட்டு வருகிறது. எரிபொருள்,நீர், மின்சார கட்டணங்களை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.இவைஅனைத்தும் அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திலே செய்யப்பட்டாலும், 2 மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு 1.7பில்லியன் வரிஅறவீட்டை மேற்கொள்ளாதுவிட்டுள்ளனர் - என்றார்.

## சுனாமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையான சுனாமி ஆரம்ப ஆபத்து நிலையை எதிர்வுகூறும் பொறிமுறையை மதிப்பீடு செய்யும் நோக்கத்தில் இந்தப் பயிற்சி இடம்பெறுவதாகபிரதி சபாநாயகர் அறிவித்தார்.

அத்துடன், கரையோர மாவட்டங்களை பிரதிநித்துவம் செய்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள்உள்ளிட்டஅனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்குமாறு பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார்.




# நவீன தொழில்நுட்பம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



நவீன தொழில்நுட்பம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார். ஆயிரக்கணக்கில் மின்கம்பிகளை அமைத்து கோடிக்கணக்கான ரூபா செலவழித்து குடியேற்றமொன்றுக்கு மின்சாரம் வழங்கும் தேவை தற்போது இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாய இரண்டாம் கட்டடத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற உலக குடியிருப்பு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

1986 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் முதல் திங்கட்கிழமை உலக குடியிருப்பு தினமாக அறிவித்தது.

இந்த ஆண்டு 37 ஆவது முறையாக உலக குடியிருப்பு தினம் கொண்டாடப்பட்டது. 'பாதுகாப்பான நகரப் பொருளாதாரம்' என்பது இந்த ஆண்டு உலக குடியிருப்பு தினத்தின் கருப்பொருளாகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உலக குடியேற்றத் தினத்துடன் இணைந்து குடியிருப்பு வாரத்தை அறிவித்துள்ளதுடன் அதன் ஆரம்ப நிகழ்வாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

உலகக் குடியிருப்பு தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடத்திய அகில இலங்கை ரீதியிலான ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரதமர் பரிசுகளை வழங்கினார். அதுமட்டுமன்றி, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கு இடையிலான நடனப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பிரதமர் பரிசில்களையும் வழங்கினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் -

மனித சமூகத்தில் அடிப்படை மனித உரிமைகளைப் பெற உலகம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது. அதற்காக நாடுகள், தேசிய, அமைப்புகளுக்கு இடையே சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக ஒப்பந்தங்கள் எட்டப்படுகின்றன. நீண்ட காலத்திற்கு முன்பே, ஐக்கிய நாடுகள் சபை மனித சமுதாயத்தில் உணவு, உறைவிடம் மற்றும் உடைகளை அடிப்படை மனித உரிமைகளாக அங்கீகரித்தது. அந்த இலக்கை நோக்கியே நாம் இன்னும் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நமது நாடு நீண்ட காலமாகப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு அதன் பலனை வெளிப்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு இதுவரை உலகம் தீர்வு காணவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் உரையாற்றும் போதே குறிப்பிட்டிருந்தார். அது நம்மைப் போன்ற சிறிய நாடுகளுக்கானது.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தக் குடியிருப்பு தினத்தின் நோக்கங்களை அடைவதற்காக தொடர்ச்சியாக உழைத்து வருகிறார். பிரேரணைகளை முன்வைத்து, கலந்துரையாடல்களை நடத்தி, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

அடிப்படைத் தேவைகளுக்கு மேலதிகமாக, கல்வி, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவை இன்றைய காலகட்டத்தில் மற்ற முக்கியமான பிரச்சினைகளாக உலகின் ஒவ்வொரு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வாழ்வதற்கு ஏற்ற சூழலின் தேவை, கல்வி வசதிகள் மற்றும் சுகாதாரம் அனைத்தும் ஒரு குடியிருப்பில் அடங்கும்.

இந்த நகரங்களைச் சுற்றிலும் குடிசைகள் உள்ளன. இலங்கைப் பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ, இலங்கைப் பிரதிநிதிக் குழுவிற்குத் தலைமை தாங்கி, உலகக் குடியிருப்பு தினம் பற்றிய யோசனையை முதன்முறையாக உலக மனிதக் குடியிருப்பு அமைப்பிடம் முன்வைத்தார் அது உலக மாநாட்டின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை முன்மொழிவை ஏற்க வேண்டியிருந்தது. அதன்பிறகு, நமது அரச தலைவர்கள் அந்த நிகழ்ச்சி நிரலை மேலும் முன்னெடுத்துச் செல்ல முடிந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் எமது நாட்டின் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு பல லட்சம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வீடுகள் கட்ட பல்வேறு திட்டங்களைத் தயாரித்து ஆதரவு அளித்தார்.

இந்தக் குடியிருப்புகளில் வாழும் பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு சுத்தமான நீர் மற்றும் அவர்களின் எதிர்கால இருப்பை உறுதிப்படுத்த கல்வி அவசியம். அந்த உண்மைகளின் அடிப்படையில், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு குடியிருப்பைக் கட்டியெழுப்ப நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

எமது அனுபவங்களும் பங்களிப்புகளும் சர்வதேச ரீதியாகவும் கருதப்படுகின்றன. குடியிருப்பு என்பது வரவிருக்கும் பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டுக்கும் பொறுப்பான ஒன்றாகும். இப்போதும் அது தொடர்பான உரையாடல்கள், தகவல்கள், புள்ளி விவரங்களைத் தொகுத்துத்தான் நடைபெற்று வருகின்றன. இப்படிப்பட்ட அனுப வங்களோடு நாம் முன்னேற வேண்டும்.

எமது பிரதேசம் பாதியளவு கூட அதிகரிக்கவில்லை. மேலும், நகர்புறத்தை முறையாக நிர்வகிக்க வேண்டும். இல்லை என்றால் மேலும் பல பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். உலக குடியிருப்பு தினமான இந்நாளில், மக்களின் வாழ்க்கை, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் நடவடிக்கைகள் குறித்து மேலும் உரையாடல்கள் நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

இன்று நமது சவால்கள் மாறிவிட்டன. இருட்டில் பார்க்கும் காலம் முடிந்துவிட்டது. மைல்கணக்கான மின் கேபிள்களை இனி இயக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு குடியிருப்புக்கு மின்சாரம் வழங்க கோடிக்கணக்கில் செலவு செய்ய வேண்டியதில்லை. அது நிரூபிக்கப்பட்டுள்ளது. இன்று நாம் எதிர்கொள்ளும் சவால் சூரிய வெப்பத்தை மின்சாரமாக மாற்றுவது. எனவே புதிதாக சிந்திக்க வேண்டும். செலவுகளைக் குறைக்க வேண்டும். சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த வேண்டும். அதற்கு ஐக்கிய நாடுகள் சபை எங்களுக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளது. அதே போல, மற்ற எல்லாத் துறைகளையும் திட்டமிடும் சவாலை நாம் சமாளிக்க வேண்டும்.

அமைச்சர் தேனுக விதான கமகே-

1986 ஆம் ஆண்டில், கென்யாவின் நைரோபியில் உலக குடியிருப்பு தினம் அறிவிக்கப்பட்டது, மேலும் 'வீடு எனது உரிமை' என்ற கருப்பொருளாக இருந்தது. அப்போதிருந்து, உலக குடியிருப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு கருப்பொருள்களின் கீழ் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் மாதத்தின் முதற் திங்கட்கிழமை உலக குடியிருப்பு தினமாகக் கொண்டாட ஐக்கிய நாடுகள் பொதுச் சபை முடிவு செய்துள்ளது. அன்றைய தினம் உலகின் பல நாடுகளில் குடியிருப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் வீடமைப்புத் திட்டம் நகரமயமாக்கலால் எழும் வீட்டுப் பிரச்சினைகளுக்கான திட்டங்களைத் தயாரிக்கிறது. மேலும் அது செயற்படுத்தப்படுகிறது.

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். சிறந்த வாழ்க்கைத் தரத்தை எதிர்பார்த்து பலர் நகரங்களுக்குச் செல்கிறார்கள். யதார்த்தம் அதுவல்ல. நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மையமாக நகரம் மாறுகிறது.

இந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நகரமே ஓர் அலகாகச் செயற்பட வேண்டும். நகரங்களுக்கு வருபவர்களுக்கு வேலை வழங்கவும், தொழில் தொடங்கவும் முடியும். கிராமப்புற மக்களின் எதிர்காலத்தை சிறப்பாகவும் வளமாகவும் மாற்ற நகரத்தை ஓர் அலகாக திட்டமிட வேண்டும். இந்த ஆண்டு உலக குடியிருப்பு தினத்தின் கருப்பொருள் பாதுகாப்பான நகர பொருளாதாரம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பான நகர பொருளாதாரத்திற்கு நாம் தயாராக வேண்டும். குடியிருப்பு நகரமயமாக்கல் பற்றிய கொள்கைகள் எங்களிடம் உள்ளன. அந்தக் கொள்கைகளின் அடிப்படையில் நீண்ட கால வளர்ச்சித் திட்டம் உள்ளது. இங்கு, பயனடையும் சமூகத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அபாயகரமான பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து அவர்கள் அகற்றப்பட வேண்டும்.

அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு, அதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன்படி, 2023 ஆம் ஆண்டளவில் நமது நீண்டகாலத் திட்டங்களுக்கு இடையூறு இல்லாமல் நிலையான அபிவிருத்தியை அடைவதன் மூலம் பாதுகாப்பான நகரமயமாக்கலுக்கு நாம் செயற்பட வேண்டும். அதற்கு, நகர அபிவிருத்தி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி, நகர குடியிருப்பு அபிவிருத்தி ஆகிய நிறுவனங்கள் முழு நேரமும் உழைக்க வேண்டும்.

சர்வதேச போக்குகள் கொள்கைத் திட்டமிடல் மற்றும் நடுத்தர மற்றும் குறுகிய கால அபிவிருத்தித் திட்டங்களில் தெளிவாக சேர்க்கப்பட வேண்டும். உலகெங்கிலும் உள்ள நிலைமைகளை ஆய்வு செய்து, அதற்கேற்ப நமது திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். உலகக் குடியிருப்பு தினத்தை மற்றுமொரு நிகழ்வாக மாற்றாமல், அதை உண்மையாக்கத் திட்டமிடுவோம்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் எஸ். சத்யானந்த, ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்புத் திட்டத்தின் இலங்கை அலுவலகத்தின் திட்ட முகாமைத்துவ அதிகாரி ஆகியோர் இங்கு உரையாற்றினார்கள்.(05)

## நாமலின் திருமணத்துக்கான

# 26 லட்சம் ரூபாய் மின்கட்டண நிலுவையைச் செலுத்திய சனத்



சர்ச்சைக்குரியதாகக் கடந்த காலங்களில் சமூக ஊடகங்களில் வெளியான ராஜபக்ஷவின் திருமணவைபவத்துக்காக மின்சார கட்டணம் தொடர்பான செய்திக்கு இராஜாங்க அமைச்சர் சனத் நிரந்த முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

தங்காலையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்துக்காக மின்சாரக் கட்டணம் தொடர்பான செய்தியில் சுமார் 26 லட்சம் ரூபா நிலுவையில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இராஜாங்க அமைச்சர் சனத் நிரந்த 26 லட்சம் ரூபா மின்சாரக் கட்டணத்தை திங்கட்கிழமை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து இராஜாங்க அமைச் சர் சனத் நிரந்த வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

'போரை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் அரசியலில் அவருக்கு ஆதரவாக இருந்த நண்பர் என்பதாலும் தான் இந்த பிரச்சினையைத் தீர்த்து வைத்ததாக இராஜாங்க அமைச்சர் சனத் நிரந்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். 'அத்துடன் நான் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் சார் பாக மின்சார சபைக்கு மொத்த மின்சார கட்டணமான 2,682,246.57 ரூபாவை செலுத்தினேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். (05)

# அவசரகால மருந்துவக் கொள்வனவு இடைநிறுத்தம் என்கிறார் கெஹலிய




உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவசரகால மருந்துக் கொள்வனவுகளை சுகாதார அமைச்சு இடைநிறுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுகாதார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவசரகாலக் கொள்முதலுடன் தொடர்புடைய சிக்கல்களின் விளைவாக குறித்த செயல்முறை குறித்து தவறான எண்ணங்கள் ஏற்பட்டமை குறித்தும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மருந்துக் கொள்வனவுகளின் அவசரநிலை இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும், தொற்றுநோய் போன்ற ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால், மீண்டும் இந்த நடைமுறை செயல்படுத்தப்படும் எனவும் தற்போது சுமார் 170 முதல் 200 வரையான மருந்துகள் பற்றாக்குறையாக இருக்கின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டில் அண்மைய காலமாக மருந்துப் பொருள்களின் தரம் குறித்த சிக்கல் எழுந்த நிலையில் குறித்த மருந்துகள் அவசர கால கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையே அதற்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆட்சியாளர்களின் பொறுப்பற்றதனம்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி உயிர் அச்சுறுத்தல் காரணமாக தனது பதவியிலிருந்து வெளியேறியதுடன் நாட்டைவிட்டும் வெளியேறியதற்கு தாம் பொறுப்பேற்க முடியாது என்று ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆட்சியாளர்களுக்கோ ஜனாதிபதிக்கோ எந்த அதிகாரமும் இல்லை. ஆகவே இந்த விடயத்தினை இந்த ஆட்சியின் பொறுப்பாகத் திரிவுபடுத்த வேண்டாமென நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷ தெரிவித்தார்.

நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சிறப்புக் கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

”முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி வெளிநாடொன்றுக்கு சென்ற பின்னரே அவரிடமிருந்து நீதிச்சேவை ஆணைக்குழுவுக்குக் கடிதம் கிடைக்கிறது. அதில் அவருக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக தான் பதவி விலகுகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு மன அழுத்தம், அச்சுறுத்தல் இருக்குமானால் அவர் வெளிநாடொன்றுக்கு சென்று கடிதம் அனுப்பவேண்டியதில்லை.

அத்துடன் நீதிபதி ஒருவருக்கு அச்சுறுத்தல் இருக்குமானால் அவ்வாறு அச்சுறுத்தல் விடுத்தவர் யாராக இருந்தாலும் அவரை நீதிமன்றத்துக்கு அழைப்பு விடுக்கலாம், பிடியாணைக் கட்டளை விடுக்கும் அதிகாரம் அவருக்கு இருக்கிறது.

அதேபோன்று குறித்த நபருக்கு எதிராக வழக்கு தொடுக்கும் அதிகாரமும் நீதிபதிக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்தாவிட்டால் அதன் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நீதிபதியின் பதவி விலகல் தொடர்பிலான எந்தப் பொறுப்பையும் ஆட்சியாளர்கள் மீது சுமத்த வேண்டாம். ஏனெனில் நீதிவான் நீதிபதிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரம், நியமன அதிகாரம் என அனைத்தும் நிர்வகிக்கப்படுவது நீதிச்சேவை ஆணைக்குழுவினாலாகும். நீதிச்சேவை ஆணைக்குழு அரசமைப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவாகும்.

அதனால் முல்லைத்தீவு நீதிவான் தொடர்பான பிரச்சினையை விசாரிப்பதற்கு ஆட்சியாளர்களுக்கோ ஜனாதிபதிக்கோ எந்த அதிகாரமும் இல்லை. அந்த அதிகாரம் இருப்பது நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு மாத்திரமாகும். எனவே யாருக்காவது இது தொடர்பில் பிரச்சினை இருக்குமானால் அவர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து, அது தொடர்பில் பதில் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்” – என்று தெரிவித்திருக்கிறார்.

அவரது உரை மிக மோசமானது. கவலைக்குரியது. அமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் பௌத்த ஆதரவுப் போக்கு நாடறிந்ததே. குருந்தூர்மலை விவகாரத்தினாலேயே முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அச்சுறுத்தப்பட்டார் என்கிற நிலையில், அவரைக் குற்றவாளியாக்கும் வகையிலேயே அமைச்சர் தொடக்கம் முதல் கருத்துத் தெரிவித்து வருகின்றார். விசாரணை ஒன்று நடத்தப்பட்டு உண்மை வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பே நீதியமைச்சர் நீதிபதியைக் குற்றவாளியாக்கும் வகையிலான கருத்துக்களைத் தெரிவிப்பது நீதியையே கேள்விக்குள்ளாக்குகின்றது.

அத்தோடு இந்தப் பிரச்சினையில் நீதியை நிலைநாட்டும் பொறுப்பு ஆட்சியாளர்களுக்குரியதல்ல என்பதும் ஏற்புடையதல்ல. நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு இந்த விடயத்தை முறையீடு செய்து, சுயாதீனமான விசாரணை ஒன்று நடத்தப்படுவதற்கும் உண்மை வெளிவருவதற்குமான ஏற்பாடுகளை ஆட்சியாளர்களேதான் மேற்கொள்ளவேண்டும். அதைவிடுத்து தமக்குப் பொறுப்பில்லை என்பது அவமானகரமானது. இதுபோன்ற செயற்பாடுகளால்தான் தமிழ் மக்கள் தொடர்ந்தும் உள்நாட்டில் நீதி விசாரணைகளை நிராகரித்து சர்வதேச நீதி விசாரணையை வலியுறுத்தி வருகின்றார்கள்.

## விமான நிலையம் ஊடாக பிரவேசிக்கும், வெளியேறும் குற்றவாளிகளை பொறிவைக்கும் திட்டம் மீள அமுல்

விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் குற்றவாளிகளைப் பொறிவைக்கும் வகையில் கடந்த வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு பல மணித்தியாலங்கள் நிறுத்தப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் குடிவரவு அதிகாரிகள் பெற்றுள்ளனர். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதிகள், புலனாய்வு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் கடந்த 19 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்ட சில மணித்தியாலங்களில் அமுல்படுத்த தீர்மானம் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனை றோயல் கனிஷ்டவில் ‘இன்றும் மகத்துவம்’ நிகழ்வு









சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இறக்காமம் கல்விக் கோட்டத்தில் காணப்படும் ஆரம்பப் பிரிவுப் பாடசாலையான கமு/சது/றோயல் கனிஷ்ட கல்லூரியின் ஏற்பாட்டில் 'எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்' எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக மாணவச்செல்வங்களின் பெறுமதியை உலகத்திற்கு வெளிக்கொண்டு வரும் வகையில் மாணவர் மனங்களில் சந்தோசத்தைத் தூவும் வகையில் 'இன்றும் மகத்துவம்' எனும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் எம்.ஏ.எம். பஜீர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் கமு/சது/றோயல் கனிஷ்ட கல்லூரியில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்று தற்போது உயர்தர பரீட்சையிலே மருத்துவம் மற்றும் பொறியியல் பீடங்களுக்குத் தெரிவான இக்கல்லூரியின் பழைய மாணவர்களான ஆர்.முஹம்மட் இம்தாத், எம்.எப்.சநௌபர் ஜஹான், ஜே.பாத்திமா றிமா ஆகியோரை நிகழ்வின் அதிதிகளாக வரவேற்று, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கோட்டக் கல்வி அதிகாரி, ஆசிரிய ஆலோசகர் ஆகியோர் இணைந்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

மேலும் சிறுவர் தினத்தை முன்னிட்டு இக்கல்லூரி மாணவர்களுக்கான பலூன் உடைத்தல் போட்டியும் இடம்பெற்ற அதேவேளை கலை இலக்கியப் போட்டிகளில் பங்கு கொண்டு பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் மேடை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (05)

## சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தில் சிறுவர் தினம்



சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனை வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தில் சிறுவர் தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம்.ஏ.அஸ்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு கல்முனை வலயத்தின் உளவளத்துறை ஆசிரிய ஆலோசகர் எம்.எம்.சியாம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுப்பொருள்களை வழங்கி வைத்தார்.

மேற்படி நிகழ்வில் பாடசாலை உதவி அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்தி குழு செயலாளர் எம்.ஜி. அஹத், பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் யூ.கே. காலித்தீன் ஆகியோரோடு பாடசாலை நலன் விரும்பிகளும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

சாய்ந்தமருது கோட்டத்தில் இப்பாடசாலையில்தான் விடே தேவையுடைய மாணவர்களுக்கான பிரத்தியோக கல்வி நிலையமும் அதற்கான விடே கல்வி கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களும் இருக்கின்றமை விசேட அம்சமாகும். (05)

## மாணவனைத் தலைக் கவசத்தினால் தாக்கிய குற்றச்சாட்டில் ஐவர் கைது!

மாணவர் ஒருவரைத் தலைக்கவசத்தால் தாக்கிய குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்வத்தை பொலிஸாரின் தகவலின்படி, பாடசலையில் இரண்டு மாணவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

பின்வத்தை, மீகஹகோவில வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கும் இளைஞர்கள் குழுவொன்றே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் தகராறில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்களும் அடங்குகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21ஆம் திகதி பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த மாணவர் மீதே சந்தேகநபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதுடன் சுமார் பத்து நாள்களாக பொலிஸாரின் தேடுதலிலிருந்து தப்பிக் கொள்ளும் நோக்கில் இவர்கள் தலைமறைவாக இருந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிங்களின் பிரச்சினைகளும் ஜெனீவாவில் ஆதாரங்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும்

## கலிலூர் ரஹ்மான் வலியுறுத்து

கிழக்கு மாகாணத்தில் புல்மோட்டை அரிசிமலை பிரதேசத்தில் அமைந்துள்ள காணி விவகாரம் தொடர்பில் பௌத்த தேரர்களுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிவரும் முரண்பாட்டை காணி அமைச்சர் தலையிட்டு விரைவில் சட்ட ரீதியாக தீர்த்து வைக்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

ஏனெனில் காணி விவகாரம் தொடர்பில் பௌத்த தேரர்களுக்கும் முஸ்லிங்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறும் வாய்ப்புகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் காணொளிகளில் தெரிகிறது. இதனால் இனமோதல்கள் உருவாகும் வாய்ப்புள்ளது. இந்த நிலை நாட்டுக்கு ஆபத்தானதாகும் என ஜனாதிபதிசெயலணியின்முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எனவே நாடு முழுவதும் உள்ள இவ்வாறான இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கக்கூடிய காணிகள் தொடர்பில் அரசாங்கம் முறையாக அவசரமாகத் தலையிட வேண்டும். இல்லையேல் பேராசை அரசியல் நலன்களுக்காக இரு தரப்பு கடும்போக்கு சிந்தனையாளர்கள் பிரச்சினைகளுக்கு வேறு உருவம் கொடுத்து, திசைதிருப்பி குழுப் பிரச்சினைகளாக மாற்றி நாட்டை சீரழித்து விடுவார்கள். இவர்களை பற்றி அலட்டிக்கொள்ளாமல் இவ்வாறான காணிப் பிரச்சினைகளை விட்டால் அது நாளடைவில் விரிவடையும் சாத்தியம் உள்ளது.

குறிப்பாகவடக்கு,கிழக்கில்உள்ள முஸ்லிம் சமூகம் நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்காக பாடுபட்டதன் காரணமாகயுத்தத்தின்போதுபெருமளவான காணிகளையுத்தகாலத்தில் இழந்துள்ளனர். முஸ்லிம் சமூகத்தின் சமய மற்றும் அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் உடனடியாகத் தலையிட்டு யுத்தகாலத்தில் இழந்த முஸ்லிங்களின் காணிகளை முறையான நடவடிக்கைகளை எடுத்து சட்ட ரீதியாக மீட்டுக்கொடுக்க முன்வரவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளை முன்வைத்து அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அரசியல் செய்யாது நிரந்தர தீர்வைக் காண நாட்டின் ஆட்சியாளர்களை அணுகி தேசிய அரசியல்நீரோட்டத்தில்நடவடிக்கை எடுக்க வேண்டும். மட்டுமின்றி அரசியல் சக்திகளை மட்டும் நம்பிக்கொண்டிராமல் மனிதாபிமானமுள்ள சட்ட வல்லுநர்கள், முஸ்லிம்சட்டத்தரணிகள்நீதித்துறை நடவடிக்கை மூலம் தீர்வு காண முன்வர வேண்டும். இவர்களுக்கு பக்கபலமாகமுஸ்லிம்சிவில்அமைப்புக்கள், வர்த்தக பிரமுகர்கள் இருக்க வேண்டும்.

அதேபோல்,போருக்குமுன்னும் பின்னும் நான்கு தசாப்தங்களாக முஸ்லிம் சமூகம் அனுபவித்த துன்பங்களை ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஆதாரங்களுடன் அறிக்கைகளை கொண்டு தெரிவித்து முஸ்லிங்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது மனிதாபிமான மனிதநேயத்தின் எல்லையற்ற பொறுப்பாகும் என்று தெரிவித்துள்ளார். (05)

# நீதித்துறையின் சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம்

## முன்னாள் தவிசாளர் நிரோஷ் அழைப்பு

தமிழ்மக்கள்தமக்குஎதிராகஇழைக்கப்பட்ட அநீதிகள் எவற்றுக்கும்நீதியை வழங்கத்தக்க சுயாதீன பொறிமுறைகள் உள்நாட்டில் இல்லை என்ற யதார்த்தத்தை வெளியுலகிற்கு உணர்த்துவதற்கும் நீதித்துறையின் சுதந்திரத்தைக்காப்பதற்கும்நாம்ஒன்றுதிரண்டு போராட வேண்டியுள்ளதாக தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இன் மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இன்று (புதன்கிழமை) இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக கோப்பாயில் இடம்பெற்ற துண்டுப்பிரசார நிகழ்வில் பங்கேற்று கருத்துரைக்கும்; போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், நீதித்துறைச் சுதந்திரம் என்பது ஜனநாயகத்துக்கு அடிப்படையானது. அச்சுதந்திரம்அண்மையநாள்களில்வலுவாக மீறப்பட்டு வந்துள்ளது. குருந்தூர்மலையில் தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்று இடத்தை பௌத்த சிங்கள மயமாக்குவதற்கு அரச திணைக்கமான தொல்லில் திணைக்களம் மற்றும் இராணுவம் பொலிஸ் போன்றவற்றின் அரச ஒத்துழைப்புடன் இனவாத நிகழ்ச்சித்திட்டம் நடைபெறுகின்றது. இதன்போது மக் களின் நீதியை உறுதிப்படுத்திய நீதிபதியை மிகவும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளனர்.

நீதிமன்ற தீர்ப்;புக்களே உதாசீனம் செய்யப்பட்டதுடன் அரசியல் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. கௌரவ நீதிபதி ரி.கணேசராஜா அவர்கள் அடிப்படையில் இனம், மதம், மொழி கடந்து நீதியை நிலைநட்டுவதற்காக உழைத்தபோது அவர் நாட்டில் வாழமுடியாமல் செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் சட்டவாக்கத்துக்குப் பொறுப்பான நாடாளுமன்றில் உறுப்பினர்களுக்குக் காணப்படும் சிறப்புரிமையைப் பயன்படுத்தி சரத் வீரசேகர போன்றோர் தமிழ் நீதிபதி என அவரையும் நிதித்துறையையும் அச்சுறுத்தினர். மீயுயர் சபையில் நீதிபதிகளை பகிரங்கமாக இனவாதிகள் எச்சரித்தனர். உண்மையில் நாடாளுமன்ற சிறப்புரிமை ஊழல்களை அல்லது மக்கள் சார்பாக கருத்துச் சுதந்திரத்தை வலுப்படுத்தும் நோக்கம் உடையது. அதனை வெறுமனே நீதித்துறையை அச்சுறுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை வியப்புடையதாகும்.

இந்நிலையில் இன்று நடைபெவுள்ள போராட்டத்தில் கைகோர்ப்பது காலத்தின் தேவை என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வின் மாவட்ட பொறுப்பாளரும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# திருமலை ஆண்கள் அணி கிரிக்கெட்டில் சம்பியன்

உலக சிறுவர் தினத்தையொட்டி கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான மென் பந்து கிறிகெட் சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மக்கெய்சர்விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபிஸ் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டிக்கு கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் (திருமதி) ஆர்.றிஸ்வானி பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் பி.மதனவாசகன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த கிறிகெட் சுற்றுப்போட்டியில், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுவர்கள் பங்குபற்றினர்.

மாவட்ட ரீதியாக நடைபெற்ற மென்பந்துகிறிகெட்சுற்றுப்போட்டிகளில் தெரிவாகியவர்களை மாகாண மட்டத்தில் கலந்துகொள்ள வைக்கும் நோக்கில் இடம்பெற்ற இப்போட்டியில், ஆண்கள் பிரிவில் 3 அணியினரும், பெண்கள் பிரிவில் 3 அணியினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றினர்.

அணிக்கு 11 பேர் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டி, 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக அமைந்தது. இதில் திருகோணமலை மாவட்ட ஆண்கள் அணியினர் வெற்றிபெற்றனர். பெண்கள் அணியில் மூன்று மாவட்ட அணியினரும் கூட்டு வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் வெற்றிபெற்ற பெண்கள் அணியினருக்கானகூட்டுகிண்ணத்தை கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி ஆர்.றிஸ்வானியும், ஆண்களுக்கான சம்பியன் கிண்ணத்தை கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம். நௌபீஸ் ஆகியோர் வழங்கிவைத்தனர்.

மாகாண மட்ட இறுதிப் போட்டிக்காக நடத்தப்பட்ட கிறிகெட் சுற்றுப்போட்டிக்கு கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம் அனுசரனை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.(05)

## சேவை ஓய்வு

கமு/கமு/அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியையாக கடமையாற்றி வந்த திருமதி நபீமா பளீல் திங்கட்கிழமை முதல் தனது 31 வருடகால ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

திருமதி நபீமா பளீல் பழைய தபாலக வீதி, கல்முனையைவசிப்பிடமாகக் கொண்டவர். இவர் 1992-06-01 ஆம் திகதி கமு/கமு/அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்று அதன் பின்னர் கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலயம், சாய்ந்த மருது அல்-ஜலால் வித்தியாலயம், லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கட மையாற்றி பின்னர் 2014.01.25 ஆம் திகதி முதல் சாய்ந்த மருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியையாகக் கடமையாற்றி வந்த நிலையில் தனது 31 வருடகால சேவையின் பின்னர் திங்கள் முதல் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

ஆசிரியையின் 31 வருட சேவையைப் பாராட்டி கௌரவித்து வழியனுப்பும் நிகழ்வு ஜீ.எம்.எம் பாடசாலையின் ஆசிரியர் நலன்புரி அமைப்பால் அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

(05)

# மாகாண மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றி ஈட்டிய மாணவர்கள் கௌரவிப்பு







கல்முனைகல்விவலயகல்முனை கமு/கமு/ அல்-பஹ்றியா மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கிழக்கு மாகாண பாடசாலை மெய்வல்லுநர்போட்டியில்கலந்துகொண்டு வெற்றியீட்டி தேசிய மட்ட பாடசாலை மெய்வல்லுநர் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை முதல்வர் எம்.எஸ்.எம். பைசால்தலைமையில்பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள் ,பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து பாடசாலை முன்றிலில் வைத்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கு மாலைகள் அணிவித்து, பதக்கங்கள் அணிவித்து பாடசாலைக்கு அழைத்து வந்து பாராட்டிக் கௌரவித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறியவர் என்றல்லவா கூறுகின்றார்? என்று ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்தவர், முதலாவதாக ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நாம் இன்னமும் கலந்துரையாடவில்லை. ஜனாதிபதி தேர்தல்அறிவிக்கப்பட்டவுடன் நாம் பொருத்தமான நபரை முன்னிலைப்படுத்துவோம். இரண்டாவது விடயம் எமது கட்சி பாதுகாக்கப்பட வேண்டிய, வெற்றிபெற வேண்டிய திட்டத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ஆகவே அதற்கு தேவையான சந்தர்ப்பத்தில் நாம் அந்த நபரைத் தெரிவு செய்வோம்.

அதேநேரம், எந்தவொரு தந்தைக்கும் மகன் சிறியவர் தான். அது தான் அன்புள்ள தந்தையின் பாசம். நான் அம்பாந்தோட்டையில் இருந்தேநாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படவேண்டும் என்று தந்தை அப்போது விரும்பினார். அதுவே அவர் எனக்குப் போட்ட நிபந்தனையாகவும்இருந்தது. கடலில் மீனைப்போட்டால் நீந்தவேண்டும் என்று அவர் எனக்கு அன்று அறிவுரையும் வழங்கினார். அந்த அறிவுரையில்தான் எனது அரசியல் போராட்டம் தற்போது வரையில் முன்னெடுக்கப்படுகின்றது - என்றார்.

## செல்வந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுள்ளதோடு சுற்றுலா வருமானம்மற்றும்இலங்கை ரூபாயின் உயர்வால் பயனடைந்துள்ளது. கடந்த ஆறு மாதங்களில், இலங்கையின் பணவீக்கம் செப்டம்பரில் 1.3 வீதமாகக் குறைந்துள்ளது.

மேலும் ரூபாயின் மதிப்பு சுமார் 12 வீதம் அதிகரித்து அந்நிய செலாவணி கையிருப்பு மேம்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கையின் கண்ணோட்டம் இன்னும் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையினால் இருப்பதால் பாதகமான அபாயங்கள் உள்ளன - என்றுள்ளது.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவின்படி தொடங்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின்தொடக்க நிகழ்வை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு 93ஆவது வயதை அடைந்துள்ளரணசிங்கவின் ஏழு தசாப்த கால ஊடகப் பணியை கௌரவிக்கும் வகையில் தொகுக்கப்பட்ட 'எட்மண்டின் பத்திரிகைப் புரட்சி' நூலும் இதன்போது வெளியிடப்பட்டது.

அங்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

1977ஆம் ஆண்டு நான் முதன்முதலில் பியகம தொகுதியில் தேர்தலில் போட்டியிட்டபோது அதற்குத் தேவையான கட்டுரையொன்றைத் தயார் செய்யநல்லஊடகவியலாளர் ஒருவரைப் பற்றி வினவிய போது திடீரென்று எட்மண்ட் ரணசிங்கவைப் பற்றி எனது தந்தை சொன்னார்.

எனதுஅரசியலில்எனக்கு முதல் கட்டுரையை எழுதித் தந்தார். கடந்த ஆண்டுவரை அது என்னிடம் இருந்தது. ஆனால் இப்போது என்னிடம் அது இல்லை. எனது தந்தை லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராக இருந்தகாலத்தில் எட்மண்ட் ரணசிங்க சிலுமின, தினமின போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராக பெரும் சேவையாற்றினார்.

பியசேன நிஷங்க, எம்.ஏ.சில்வா, மார்ட்டின் விக்கிரமசிங்க போன்ற மூத்த ஊடகவியலாளர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்துஅவர் பயிற்சி பெற்றுக்கொண்டார். எனவே, சுதந்திரத்திற்கு முன்னர் இருந்த ஊடகக் கலை, அதற்குப் பின் தோன்றிய ஊடகக் கலை இரண்டிலும் ரணசிங்க நல்லஅனுபவத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

1953ஆம் ஆண்டு அரிசியின் விலை அதிகரித்த போது டட்லி சேனாநாயக்க பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு 69 ஆண்டுகளுக்குப் பின்னர், கோட்டாபய ராஜபக் ஷ எண்ணெய்தட்டுப்பாட்டினால் பதவி விலக நேரிட்டது. இந்த 69 வருடங்களில் ரணசிங்கவுக்கு நிறைய அனுபவம் கிடைத்திருக்கும். அவற்றைப் பற்றி புத்தகம் எழுதும் திறமை அவருக்கு இருக்கிறது.

1964 ஆம் ஆண்டு பத்திரிகைத்துறைப் போராட்டத்தை ரணசிங்க நடைமுறையில் முன்னெடுத்தார். அவரின் அனுபவம்இந்நாட்டின்ஊடகக் கலாசாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றே கூற வேண்டும். ஆனால் தற்போது அச்சு ஊடகத்துறை ஓரளவு பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளது.

அன்று எழுத்துக்கள் கோர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட பத்திரிகைக் கலை இன்று ஐ-பாட் வரையில் வளர்ந்துள்ளது. லேக்ஹவுஸ் போன்ற பெரும் மாளிகைக்குள் அடங்கி கிடந்த அறிவை கூகுள் ஊடாக இலகுவாக தேடிக்கொள்ளும் வாய்ப்பு தற்போது உள்ளது. அதனால் பத்திரிகை துறையை சமூகமயப்படுத்துவதற்கு தொழில்நுட்பம் சிறந்த களமாகவும் அமைந்துள்ளது.

இருப்பினும் எந்தவொரு நாட்டிலும் உள்ள ஊடகங்கள் அந்நாடுகளின்சட்டங்களுக்கு இணங்கிச்செயற்படுகின்றன. ஆனால் சமூக ஊடகங்களின் வரவை தொடர்ந்து அவரவரின் தேவைக்கேற்ற பதிவுகள் இடப்படுகின்றன.

அதனால் அனைத்து சமூகஊடகங்களும்சர்வதேச சட்டத்துக்கு இணங்க வேண்டுமாஅல்லதுநாட்டின்உள்ளக சட்டதிட்டங்களுக்கு இணங்க வேண்டுமாஎன்றகலந்துரையாடலை ஏற்படுத்த வேண்டும். ஐரோப்பாவில் உள்ள சட்டத்திற்கு அனைவரும் உடன்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

தற்போது உலகிலுள்ள பத்திரிகை மற்றும் சஞ்சிகை உரிமையாளர்கள் விற்பனை அல்லது முதலீட்டாளர்களிடத்தில் மீளக் கையளிக்கும் செயற்பாடுகளுக்கு தயாராக உள்ளனர். அதனால் ஊடகத்துறையின் எதிர்கால நடைமுறையை அடுத்த இரண்டு, மூன்று வருடங்களுக்குள் அவதானிக்க முடியும். அந்த துறைசார் நிபுணர்கள் நியூயோர்க்கில் மாத்திரமின்றி இலங்கையிலும் உருவாகலாம் - என்றார்.

## நிகழ்நிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட சில அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமாயின், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்என்றும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்என்றும்நீதிமன்றம் உத்தரவிடவேண்டுமென அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நாடாளுமன்றம் நேற்று பிரதி சபாநாயகர் தலைமையில் தொடங்கியபோது, நிகழ்நிலைகாப்பு சட்டமூலத்தை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து உடனடியாகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

# நீதித்துறைக்கு சாவு மணி

## சிறீதரன் எம்.பி. சபையில் காட்டம்

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவைஅவரால்விடுக்கப்பட்ட கட்டளையை மீளப்பெறுமாறு சட்டமா அதிபர் அழுத்தம் பிரயோகித்து இந்த நாட்டில் நீதித்துறைக்கு சாவு மணி அடிக்கப்பட்டுள்ளதென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிரதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஆகியன மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த்ததாவது:

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி டி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறுவதற்கு காரணமாக இருந்த ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களின் இனவாத கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பேரினவாத ஆட்சியாளர்கள் இன்னும் ஒரு நடவடிக்கை எடுக்கவில்லை.

நாட்டின் நீதித்துறை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த சம்பவம்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. நாட்டின் நீதித்துறை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை நாட்டு மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். 2005, 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் நீதியரசர் ஸ்ரீநிதியை இராணுவ வாகனத்தின் ஊடாக கொலை செய்யும் முயற்சி எடுக்கப்பட்டது.

2010ஆம்ஆண்டுகாலப்பகுதிகளில் பிரதமநீதியரசர்சிரானிபண்டாரநாயக்க வலுக்கட்டாயமான முறையில் பதவி நீக்கப்பட்டார். இந்த நாட்டில் நீதி இல்லை என்பதற்கு பல விடயங்கள் சான்று பகர்கின்றன. படுகொலை செய்யப்பட்ட ஜோசப் பரராசசிங்கம் உட்பட பல தலைவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. திருகோணமலையில் கொல்லப்பட்ட 5 மாணவர்களுக்கும், கொலை செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டு தொண்டர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை.

வழங்கிய கட்டளையை மீளப் பெறுமாறு சட்டமா அதிபர் விடுத்த அழுத்தத்தினால் முல்லைத்தீவு நீதிபதி பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இந்த நாட்டில் தொடர்ந்து சுயாதீனமாக செயற்பட முடியாது என்பதை நீதிபதி தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள். சிங்களபேரினவாத கொள்கையில் இருந்து விடுப்பட்டு அரச தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்குதீர்வுவழங்குவார்கள் என்பதுகானல்நீராகவேகாணப்படுகிறது.

குருந்தூர் மலையில் உள்ள சிவன் ஆலயத்தை இடித்தழித்து அங்கு பௌத்த விகாரை கட்டும் போது கட்டுமான் பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தடையுத்தரவு பிறப்பித்த போது பௌத்த பேரினவாத கொள்கையுடையவர்கள், பௌத்த பிக்குகளை ஒன்றுத்திரட்டி படைபட்டாளத்துடன்ஒன்றிணைந்துகுருந்தூர் மலையில் பௌத்த விகாரையை கட்டி முடித்துள்ளார்கள். இது நீதிமன்றத்தை அலட்சியப்படுத்தும் செயற்பாடாகும்.

திருகோணமலையில் அரிசி மலை பகுதியில் கிழக்கு மாகாண ஆளுநரின்பணிப்புரையைபுறக்கணித்து பலவந்தமான முறையில் பௌத்த விகாரைகட்டப்படுகிறது. இந்தநாட்டில்நீதி எங்குள்ளது. நாட்டின்நீதித்துறைக்குசாவு மணிஅடிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கும்மக்களை முடக்கவே அரசாங்கம் முயற்சிக்கிறது. எவ்வகையான அடக்குமுறையை கொண்டு வரலாம் என்றே அரச தலைவர்கள் சிந்திக்கிறார்கள்.

இந்தநாடுமுன்னேற்றமடைவதற்கு எந்த சாத்தியமும் கிடையாது. முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலை விவகாரம், கொக்குத்தொடுவாய் மனித புதை குழி விவகாரத்தை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதால் நீதிபதி சரவணராஜா பாரிய நெருக்கடிக்குள்ளானார். தமிழ் நீதிபதி நீதிவழங்க முடியாது எனநாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பேரினவாத கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் நீதித்துறை இறந்துள்ளது. இந்த நாட்டிலா இன நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்டோருக்கு தீர்வு கிடைக்கப் போகிறது. இதனால் தான் நாங்கள் தொடர்ந்து சர்வதேச விசாரணைகளை கோருகிறோம். தீர்வு திட்டங்களுக்காக கொண்டு வரப்பட்ட அறிக்கைகள், திட்டங்கள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

சகலஇனங்களையும்ஒன்றிணைத்து இந்த நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளுக்கு சர்வதேச விசாரணை ஊடாக தீர்வு கோருகிறோம். இந்த நாட்டில் நீதி கிடைக்காது, நீதிக்கட்டமைப்பைஅரசியல் தலையீட்டால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது -என்றார்.

# உண்மைகளை வெளிப்படுத்தாவிட்டால் நீதிமன்றம் மீதான நம்பிக்கை சிதையும்

## ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றில் கவலை தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உண்மைகள் பகிரங்கப்படுத்தாது விட்டால் நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையுமென எதிரணியின்சுயாதீனக்குழு உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஆகியன மீதான விவாதத்தில் கலந்து கொண்ட உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 14ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை நீதித்துறையே பாதுகாக்கிறது. அரசியலமைப்பால் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது நீதிமன்றத்தின் ஊடாக அந்த முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும்.

நீதிபதிகள் அச்சமின்றி செயற்படுவதற்குநீதித்துறைசுயாதீனமாகசெயற்பட வேண்டும். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதிபாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

சுயாதீனமான முறையில் செயற்பட முடியாது ஆகவ பதவி விலகுவாக குறிப்பிட்டு அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இலங்கையின் நீதிக்கட்டமைப்பில் இவ்வாறான நிலை முன்னொருபோதும் ஏற்படவில்லை.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் பாரபட்சமின்றிய வகையில் வெகு விரைவாக விசாரிக்கப்பட்டு உண்மை பகிரங்கப்படுத்த வேண்டும். இல்லையேல் நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும் - என்றார்.

# நீதித்துறைக்கு அழுத்தம் நாடாளுமன்றமேதான்

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

நாட்டின் நீதித்துறைக்கு அழுத்தம் கொடுத்து வருவது நாடாளுமன்றத்தான் என்றுஎதிர்க்கட்சிபிரதமகொறடாலக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மற்றும் நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடந்து தெரிவித்ததாவது:

முல்லைத்தீவுநீதிமன்றநீதிபதிதனக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக பதவி விலகி இருக்கிறார். நீதிபதிகள் இவ்வாறு பதவி விலகும் நடவடிக்கைகள் இடம்பெறுவதுசாதாரணமாகும். ஆனால் அவர் நாட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறுநீதிபதிஒருவர்அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி இருப்பது வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். இது பாரதூரமான விடயமாகும்.

அத்துடன்நீதிமன்றத்துக்கு அதிகமாக அழுத்தம்கொடுப்பதுநாடாளுமன்றமாகும். நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை பாதிக்கப்படும்வகையில்நாடாளுமன்றம் செயற்பட்டு வருகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, அதுதொடர்பாக நீதிமன்றம் எந்த தலையீட்டையும் மேற்கொள்ள முடியாது என இந்த நாடாளுமன்றமே உத்தரவிட்டது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கதிவுனெகுமதிட்டத்துக்கு ஆதரவாக தீர்ப்பளிக்காததால் அவருக்கு எதிராகநாடாமன்றத்தில்குற்றப்பிரேரணை கொண்டுவந்துஅவரைபதவியில்இருந்து நீக்கி இருந்தது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தக்கோரி நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் தேர்தலை நடத்த பணம் வழங்காமல் நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்தது.

அத்துடன் தேர்தலை பிற்போட்டமைக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல்வழக்குதொடுக்கப்பட்டு 8மாதங்கள் ஆகியும் இன்னும் அதுதொடர்பான விசாரணை முடிவுக்கு வராமல் இருக்கிறது. சட்டத்தின் பிரகாரம் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கு விசாரணை 2மாதங்களில் தீர்ப்பளிக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை நிராகரிக்கச்செய்ய நாடாளுமன்ற குழுவில் தீர்மானித்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ஆனால் அதற்கு நாங்கள் அனுமதி வழங்கவில்லை. அவ்வாறு வேட்புமனுகளை நிராகரிப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் கருத்துக்கணிப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால் சாதாரணமாக இதனை மேற்கொள்ள முடியாது - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சமூக ஊடகங்களை நசுக்குவது முறையல்ல

## ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார கருத்து

சமூக ஊடகங்களை நசுக்குவது முறையானதல்ல. இருப்பினும் எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை சமூக ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். அதனைக் கட்டுப்படுத்த சில கட்டுப்பாடுகள் அவசியமாகும். அதுவே இந்தச் சட்டமூலத்தில் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும்குறிப்பிட்டவைவருமாறு-

சமூக ஊடகங்களை நசுக்குவது முறையானதல்ல. இருப்பினும் எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை சமூக ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துவதாகும்.

இதனைத் தவறாகப் பயன்படுத்துவதன் காரணமாக இளைஞர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

குடும்பப்பிணைப்புகளிலிலும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களின் ஊடாக மதங்களுக்கும்சிலர்அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

எனவே, சமூக ஊடகங்கள் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தினால், பிரச்சினைகளை உருவாக்கினால், அல்லது ஆத்திரமூட்டும்செயற்பாடுகளைத் தோற்றுவித்தால் அதனைக் கட்டுப்படுத்த சில கட்டுப்பாடுகள் அவசியமாகும்.

அரசாங்கத்தைத் தொடர்ச்சியாக விமர்சிக்கலாம். சமூக ஊடகங்கள் மூலம் பாதிக்கப்பட்ட நபருக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக இடம் ஒன்றுஇருக்கவேண்டும். அதுவே இந்த சட்டமூலம் கொண்டுவரப் படவுள்ளது. - என்றார்.

(05)

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் வரலாற்றுச் சாதனை

கலாசார அலுவல்கள் அமைச்சால் வருடம் தோறும் நடத்தப்பட்டு வரும் பிரதீபா - 2023 தேசிய மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்திநிகழ்ச்சித்திட்டத்தில்பயிற்சி பெற்றுவரும் மாணவர் குழுவினர்கள் கிழக்கு மாகாணத்தில் முதலாம், இரண்டாம் இடங்களை பெற்றதுடன் கனிஷ்ட நடன நிகழ்ச்சியான ரபான், கோலாட்டம் போட்டியிலும், சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டம் ஆகிய இரண்டு பிரிவுகளில் கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான் கோலாட்டம் குழுவினர் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்று வரலாற்று சாதனை புரிந்துள்ளார்கள்.

தேசிய போட்டிகள் பொல்கொல்ல மகாவளி கல்விக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. அதில் சிரேஷ்ட நிகழ்ச்சி கோலாட்டம் நடனகுழுவினர் தேசிய மட்டத்தில் இரண்டாம்இடத்தைப்பெற்று சாதனை படைத்துள்ளார்கள். அதேபோல்சித்திரம் வரைதல்தேசிய மட்டத்தில்எம்.எல்.எப். ஜியா மூன்றாம் இடத்தையும் ஜெ.றின்சான் ஆறுதல் பரிசினையும் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

இந்த வெற்றியில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் கலாசார மத்தியநிலையத்தில்இம்மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம். அமீர் மற்றும் அவரோடு இணைந்து இந்த மாணவர்களை பாரம்பரிய முறையில் பயிற்றுவித்த மூத்த கலைஞர்களான எம்.ஐ. அலாவுதீன், எம்.எச். பைசர், ஏ. இஸ்ஸதீன், ஆசிரியர்களான எ.எல்.எம். ஸாஜி, ஐ. சியாம், எஸ். எச்.எ.கபூர் மற்றும் இசை வடிவம் அமைத்த இசைக்கலைஞர் எம். அக்பர் ஆகியோர் உட்பட இந்த வெற்றிக்காகப் இரவு பகல் பாராது மிகவும் பாடுபட்டு பயிற்சியளித்து அனைவரினதும் வெற்றிக்கு பின்புலமாக இருந்த கலாசாரமத்தியநிலையபொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் அவர்களுக்கும், இவ்வெற்றிக்கு பின்புலமாக இருந்த சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் அவர்களுக்கும் கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி சபை செயலாளர் அஸ்வான் மௌலானா, கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி சபை உபசெயலாளர் ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர், சபை நிறைவேற்று உறுப்பினர்கள், ஊடகவியலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர், மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி. நவ்ஸாத், எஸ். புவித்ரன் மற்றும் இம் மாணவர்களின் பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு வாழ்த்துக்களோடு பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.

(05)

# வாழ்வோம் வளம்பெறுவோம் கட்டம் 60இல் முல்லைத்தீவில் 42 பயனாளிகள் உள்ளீர்ப்பு





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினருமான துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் 'வாழ்வோம் வளம்பெறுவோம்' செயற்றிட்டத்தின் அறுபதாங் கட்டம் ஒக்ரோபர் (02) திங்கட்கிழமை கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள அவரது மக்கள் தொடர்பகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கட்டத்தில் தாயகத்தைச் சேர்ந்த 42 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டு அவர்களுக்கு அரிசிப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில் -

'வாழ்வோம் வளம்பெறுவோம்' என்ற பெயரிலான செயற்றிட்டம் குறுங்கால வாழ்வுடைமை ஊக்குவிப்பு நோக்கில் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

குறித்தசெயற்றிட்டம், ரவிகரன் கடந்த 17.05.2014 அன்று முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் முதன்முதலாகஆரம்பிக்கப்பட்டது. அந்தவகையில் நடைபெற்று முடிந்த அறுபதாங் கட்டத்துடன் இதுவரையில் 3461 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் பாலா, நளினி குடும்பத்தினர் இக்கட்டத்திற்கான நிதி உதவி வழங்கியிருந்தனர்.

அதேவேளை பொருளாதாரம் நலிவுற்றகுடும்பங்களைச்சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பலர் பாடசாலைக்குநீண்டதூரம்நடந்து செல்வதாகவும், அவர்களுக்கு சைக்கிள்கள் வழங்குமாறு இந் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த பொதுமக்களால் துரைராசா ரவிகரனிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

இவ்வாறு நீண்டதூரம் பாடசாலைக்கு நடந்து சென்று கல்வி பயிலும் பொருளாதாரம் நலிவுற்ற மாவர்களுக்கு, கடந்த வடமாகாணசபைக் காலத்தில், மாகாணசபை நிதி ஒதுக்கீட்டினூடாகவும், புலம்பெயர் உறவுகளின் நிதி ஒதுக்கீட்டினூடாகவும் அதிகளவான சைக்கிள்களை வழங்கியிருப்பதாகரவிகரன்இதன்போது சுட்டிக்காட்டினார். அத்தோடு இவ்வாறு மாகாணசபை இல்லாத நிலையிலும் இவ்வாறான அரிசி வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நிதியுதவியினை வழங்குகின்ற புலம்பெயர் உறவுகளுக்கு தமது நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.


மேலும் மிதிவண்டிகள் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும்போது, இதற்குமுன்னர் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியது போன்று, நிச்சயமாகமிதிவண்டிகள்வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந் நிகழ்வில் முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், சமூக செயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இராசநாயகம் ஜெரோம்சன், கிருஸ்ணபிள்ளை சிவகுரு உள்ளிட்டவர்ளும் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மாம்பழ உற்பத்தியில் பெண் அதிபர் சாதனை











உலக சிறுவர் தினத்தையொட்டி கல்முனை கமு/கமு/அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் மாம்பழ அறுவடை நிகழ்வு திங்கட்கிழமை பாடசாலை அதிபர் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா தலைமையில் இடம் பெற்றது.

சுமார் 100 இற்கும் அதிகமாக அறுவடை செய்யப்பட்ட டொம் யேசி மாம்பழ இனங்கள் முதற்கட்டமாக அதிதிகளால் உத்தியோகபூர்வமாக வெட்டப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்விற்குப் பிரதம அதிதியாக கல்முனைவலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம், கௌரவ அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் (நிர்வாகம்) மற்றும் ஏனைய அதிதிகளாக பாடசாலை முன்னாள் அதிபர் ஏ.எல்.ஏ.கமால், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு செயலாளர் பொறியியலாளர் எம்.ரீ.எம்.அனப் உறுப்பினர்களான ரீ.எம்.இர்பான் ஜே.எம்.ஜெஸீல் ஐ.எம்.சமீறுல் இலாஹி பழைய மாணவர் செயலாளர் எஸ்.எச் எம் .அஜ்வத் எம்.எம் முஹ்ஷீன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.றிஸான் அமீர் ஏ பாறூக் இமுன்னாள் நாவதன்வெளி பிரதேச சபை செயலாளர் எம். பி. அப்துல் றஹீம் பாடசாலை ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது சுமார் 100 இற்கும் அதிகமாக மாம்பழங்கள் அறுவடை செய்யப்பட்டநிகழ்வானதுஅதிபர்உட்பட மாணவர்களின்தியாகம், அர்ப்பணிப்பு , ஒழுக்கம் சம்பந்தப்பட்டதுடன் மாணவர்களின் சுற்றாடல் சார் நடவடிக்கைகள் இந்த அறுவடை செயற்பாட்டில் தங்கி இருப்பதாகவும் ஒழுக்கம் உள்ள இடத்தில் தான் காய் கனிகள் பாதுகாப்பாக இருக்கும் எதிர்காலத்தில் இச்சிறுவர்களின் திட்டங்கள் வெற்றி பெற வாழ்த்துக்களை தெரிவிப்பதாக அதிதிகளாக கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த நூற்றுக்கணக்கான மாம்பழ அறுவடைக்கு முன்னர் மாம்பழஉற்பத்திக்கானபங்களிப்பினை யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர் மனோகரன் சசிகரன், ஊடகவியலாளர் பாறுக் ஷிஹான் ஊடாக ஒரு தொகுதி பொதி செய்கின்ற பைகளை வழங்கி ஊக்கப்படுத்தி ஆலோசனை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# கொக்குத்தொடுவாயிலும் நீதிபதியை அச்சுறுத்தி உண்மைகளை மூடிமறைக்க அரசதரப்பு முயலுமா?

## ரவிகரன் அச்சம்

நீதிபதி சரவணராஜாவிற்கு குருந்தூர்மலை விவகாரத்தில் அரசதரப்பால் அரசியல் ரீதியாகப் பிரயோகிக்கப்பட்டமனஅழுத்தம் மற்றும், உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் தனது பதவியைத்துறந்து இந்தநாட்டைவிட்டு வெளியேறியுள்ள இத்தகைய சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிவிவகாரத்திலும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத் தன்மை மூடி மறைக்கப்படுமோ என்ற அச்சம் எழுவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவுவலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சர்வதேச சிறுவர்தினமான ஒக்ரோபர் முதலாம் திகதி ஆர்ப்பாட்டமொன்றை முன் னெடுத்திருந்த நிலையில் அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - சர்வதேசரீதியில் சிறுவர்களும், முதியவர்களும் ஒக்ரோபர் (01)இல் தமக்கான தினத்தில்மகிழ்வோடிருக்கின்றனர்.

இந் நிலையில் இறுதிக்கட்ட போர்க்காலத்தில்இராணுவத்திடம் கையளித்த சிறார்களையும், உறவுகளையும் மீளக் கையளிக்குமாறு வலியுறுத்தி எமது உறவுகள் இரண்டாயிரம் நாள்களுக்கு மேலாக பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதுமாத்திரமின்றி, இந்த நாட்டில் நீதித் துறையின் சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. குறிப்பாக அரசியல் ரீதியாக அரச தரப் புக்கள் முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவிற்கு அழுத்தங்களைப் பிரயோகித்து, உயிர் அச்சுறுத்தல் விடுத்து இவ்வாறாக பல வழிகளிலும் நீதிபதியைத் துன்புறுத்திய நிலையில்நீதிபதிதனதுபதவியைத் துறந்து இந்த நாட்டிலிருந்து வெளியேறியிருக்கின்றார்.

தற்போது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம் இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு நீதிபதி, சட்டவைத்திய அதிகாரி, தொல்லியல் துறையினர் ஆகிய தரப்புக்களின் பங்கேற்புடன் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான சூழலில் அரசியல் ரீதியாக அரச தரப்புக்கள் பிரயோகித்த அழுத்தங்கள்மற்றும், அச்சுறுத்தல் நிலைமைகள் காரணமாக நீதிபதி இந்தநாட்டைவிட்டுவெளியேறியுள்ள சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும், அழுத்தங்கள் அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத்தன்மை மூடி மறைக்கப்படுமோ என்ற அச்சம் எமக்குத் தோன்றியிருக்கின்றது - என்றார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் பொருளாதார நிலைமையால் இளைஞர்கள் வெளிநாட்டு வேலைகளை நோக்கி நகர ஆரம்பிப்பு

## சர்வதேச மாநாட்டில் எஸ்.எம். சபீஸ் கருத்து

இளைஞர், யுவதிகளின் பங்குபற்றலுடன்எமதுஉலகைசமாதானம் நிறைந்த சூழலாக வடிவமைத்துக் கொள்வதற்கான ஒன்றிணைந்த முயற்சியில் நாங் கள் இங்கு குழுமியிருயிருக்கின்றோம். முழு உலகமும் சமமான கட்டமைப்பு, மனித உரிமைக்கான மரியாதை மற்றும் பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வுமிக்கசூழலைக் கொண்டசமாதானம் நிறைந்த ஒரு சூற்றாடலின் தேவையில் உள்ளது என உலகளாவிய இளைஞர் அமைதி விழா 16 ஆவது மாநாட்டுக்கான ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

இளைஞர் அமைதிவிழா 16 ஆவது மாநாடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது அந்த மாநாட்டில் உரையாற்றிய அவர், தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவிக்கையில் -

தற்காலங்களில் நாங்கள் வளங்களின் தட்டுப்பாட்டை அனுபவிக்கின்றோம், அத்துடன் இவ்வளங்களை வினைத்திறனற்ற முறையில் முகாமைத்துவம் செய்து பகிர்ந்தளிப்பது நெருக்கடி, முரண்பாடுகளின் விளைவால் ஏற்படும் அமைதியின்மைக்கு விட்டுச் சென்றுள்ளது. அண்மைக் காலமாக உக்ரைன்-ரஷ்ய நாடுகளுக்கிடையிலான யுத்தம்இவ்விருநாடுகளில்மாத்திரம் மிக மோசமான விழைவுகளை ஏற்படுத்தவில்லை. உலகம் முழுவதும் அதன் தாக்கம் வியாபித்துள்ளது. உக்ரைன் மற்றும் ரஷ்யா மீது, உணவு மற்றும் சக்தி வளங்களுக்காக தங்கி வாழும் நாடுகள் நெருக்கடிகளையும் மற்றும் சமூக-பொருளாதார கோளாறுகளையும் சந்திக்க நேர்ந்துள்ளது.

எனது அபிப்பிராயத்தில் அமைதியின்மை என்பது ஒரு பூகோளமயமான நிகழ்வாகும். அது பூகோளமயமான சமூக-பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரத்தை பாதிக்கிறது. அமைதியின்மையை,நாம்பூகோளச் சூழலிலே நோக்க வேண்டும். அதன் பின்னணியில் பயனுள்ள தேசிய மற்றும் பிராந்திய மட்டத்திலான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி பூகோள மட்டத்தில் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவரும் என நான் நம்புகிறேன்.

தனிநபர்களுக்கிடையேயும் சமூகங்களுக்கிடையேயும் நிரந்தர சமாதானத்தை உருவாக்க சமூக மூலதனத்தை கட்டியெழுப்புவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். சமூக மூலதனம் என்பது பகிர்தளிக்கும் பண்புகள் அல்லது வழுங்களை கொண்ட தொகுப்பாகும். இது சமமான கட்டமைப்பையும், மனித உரிமைக்கான மரியாதையையும், பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வுச் சூழலையும் இவைகளின் விளைவால் வளங்களை பகிர்ந்துகொள்வதில் சமத்து-வத்தையும் உயர்த்தும். உலகின் சனத்தொகையில் ஏறத்தாள அரைவாசியினர் இளைஞர்கள் என சொல்லப்படுகிறது. இளைஞர்கள் ஒருநாட்டின் முதுகெலும்புகள் ஆவர்.

இளைஞர்கள் அபிவிருத்தி முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற வேண்டும். இவர்கள் சமூக-பொருளாதார மற்றும் தலைமைத்துவ துறைகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் முடிவடைந்த யுத்தம், உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற கொவிட்-19 தொற்று மற்றும் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடி என்பன இந்த நாட்டின் இளைஞர்களின் விருத்தியில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதோடு அவர்களின் நலிவுறு தன்மையையும் அதிகரித்துள்ளது. இலங்கையிலுள்ள இளைஞர்கள் அமைதி நிறைந்த வாழ்வை வாழ்வதற்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களில் பெரும்பாலானோர், விசேடமாக கிராமப் பகுதிகளில் வாழ்பவர்களுக்குத் தரமான கல்வி மற்றும் திறன்களை வளர்க்கும் பயிற்சிகளை நோக்கிய அணுகல் குறைவாகவே உள்ளன. சிலசமயங்களில், இவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டும் சித்திரிக்கப்பட்டும் வருகிறார்கள், இளைஞர்கள் ஏலவே, திறன் குறைந்த வெளிநாட்டு வேலைகளை நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர். இளைஞர்கள் சமாதானத் தூதுவர்களாக பணியாற்றுவது மாத்திரமல்லாமல் அவர்கள் சமாதானத்தில்; வாழ்ந்து சமாதானத்தை அனுபவிப்பவிப்பதன் மூலம் சமாதானத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிக்க வேண்டும். இந்த 16 ஆவது மகாநாடு, பூகோள சமாதானத்தில் இளைஞர்களின் பங்குபற்றலை அதிகரிக்க அதிகமான புதுமையான திட்டங்களைக் கொண்டு, இளைஞர்களுக்கான களத்தை மேலும் மேம்படுத்தும் ஏன விசுவாசத்துடன் நம்புகிறேன்.- என்றார்

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். பல நாடுகளையும் சேர்ந்த இளைஞர்களின் பங்குபற்றுதலுடன் செப்ரெம்பர் 30 தொடக்கம் ஒக்ரோபர் 02 ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெற்றது. (05)

# சமிந்தவாஸ் தலைமையில் வடக்கில் பயிற்சி முகாம்!

யாழ்ப்பாணத்தில் இலங்கை அணியின் முன்னாள் பிரபல பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் தலைமையிலானகுழுவினரால்துடுப்பாட்டபயிற்சி முகாமொன்று நடத்தப்படவுள்ளதாக ஜெப்னா ஸ்ரான்லியன்ஸ் இயக்குநர் க. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

'துடுப்பாட்டத்தில் திறமையானவர்களை கண்டறிவதற்கான பயிற்சி முகாமொன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில்நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி முகாமானது சமிந்த வாஸ்தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்படவுள்ளது. அவர்களால் சிறந்த வீர வீராங்கனைகளை தெரிவு செய்யப்படுவார்கள்.

13 வயதில் இருந்து 25 வயது வரையிலான வீர வீராங்கனைகள் இந்த பயிற்சியில் பங்கேற்க முடியும். பங்கேற்க விரும்புவோர் 0778013310எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும். அதேவேளை நாம் துடுப்பாட்ட அக்கடமி ஒன்றினை, யாழ்ப்பாணத்தில்நிறுவிவருகின்றோம். அது தற்போது நிறைவுறும் தருவாயில் உள்ளது. அதில் துடுப்பாட்டம் தொடர்பில் விசேட பயிற்சிகளை வழங்கி திறமையான வீரர்களை உருவாக்க உள்ளோம். அதற்கான வீரர்களைத் தேர்ந்து எடுப்பதற்கான முதல் தேர்வே இந்த பயிற்சி முகாமாகும்.

இதில் பாடசாலை மாணவர்கள் , கழகங்கள் , மாவட்ட துடுப்பாட்ட சங்க வீரர்கள் என பங்கேற்க முடியும். இதில் 100 தொடக்கம் 150 பேர் வரையில் தெரிவு செய்யவுள்ளோம்.

தெரிவு செய்யப்படப்படும் வீர வீராங்கனைகள் எம்மால் நிர்மாணிக்கப்படும் துடுப்பாட்ட அக்கடமியில் மேலும் பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடியும். அதன் ஊடாக அவர்கள் தமது திறமையை வளர்த்துக் கொள்வதன் ஊடாக வடக்கில் சிறந்த துடுப்பாட்ட வீர வீராங்கனைகள் உருவாகுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

எம்மால் உருவாக்கப்படும் வீர வீராங்கனைகளை வெளிநாட்டு கழகங்கள் , சுற்றுப்போட்டிகள் என்பவற்றில் பங்கேற்க முடிந்த வரையில் வாய்ப்புக்களை ஏற் படுத்தி கொடுப்போம்' இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# அரச பொதுச் சேவைகள் சங்க கூட்டம்: முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை, விலைவாசி அதிகரிப்பு அதனைத் தொடர்ந்து வந்துள்ள அரசியல் நெருக்குவாரங்களுக்கு மத்தியில் அரச சேவை தொழில் உரிமை, பாதுகாப்பு, கௌரவம் என்பனவற்றை இழந்த நிலையில் இன்று ஆட்டம் கண்டுள்ளது. தொழில்வல்லுநர்கள், நிபுணத்துவ மிக்க கல்வியியலாளர்கள், உட்படஏன் நீதிபதிகளே இந்த நாட்டை விட்டு தப்பி ஓடும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இதிலிருந்து பாதுகாக்க அனைத்து அரச உத்தியோகத்தர்களும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என இலங்கை அரசாங்க பொது சேவைகள் சங்கத்தின் தலைவர் க.நடராஜா தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் பொதுச் சேவைகள் சங்கத்தின் அம்பாறை மாவட்ட குழுகூட்டம் திருக்கோயில் குமரவித்தியாலயத்தில் சங்கத்தின் அமைப்பாளர் பி.கோகுலோஜன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இங்கு உரையாற்றிய இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.புஹாது, தொழிற்சங்கங்களின் பலம் பலவீனமாகிகொண்டிருக்கின்றன. தொழிற்சங்கங்களால் விடுக்கப்படும் நியாயமான கோரிக்கைகளை அலட்சியம் செய்யும் அதிகாரிகளின் மனநிலையில் மாற்றத்தை கொண்டு வருவதற்கான செய்தியை தெளிவாகக் கூறுவதற்கு அரச உத்தியோகத்தர்கள்ஒற்றுமைப்பட வேண்டியது அவசியமானதாகும். அரசியல் அதிகாரம் கொண்டவர்களின் எல்லைமீறிய அழுத்தங்களுக்கு இடமளிக்காது, அரச சேவையின் சுயாதீ-னத்தையும், கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டிய நிலைமைக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்காக அனைத்து அரச உத்தியோ கத்தர்களும் வேறுபாடுகளை மறந்து தம்மோடு கைகோர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தார். இதன் போது புதிதாக இணைந்து கொண்ட அங்கத்தவர்களுக்கான தொழிற்சங்க அங்கத்துவபத்திரங்களும்வழங்கி வைக்கப்பட்டதுடன், தற்போதைய விலைவாசிஅதிகரிப்புவாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப அரச ஊழியர்களின் சம்பளத்தை ரூபா 20,000 அதிகரிக்க கோரல். 2020, 2021மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த கோரல். கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான 2024 ஆம் ஆண்டுக்கான இட மாற்றத்தின் போது உத்தியோகத்தர்களது கோரிக்கைக்கு மாற்றமாகஇடமாற்றக்கட்டளைகள் வழங்கப்படுவதனை முடியுமானவரை தவிர்க்க கோரல்

பொது நிர்வாக அமைச்சின் 10/2000 சுற்றக்கைக்கு அமைவாக, கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான ஆலோசனைக்குழுக்களை ஸ்தாபிப்பதன் மூலம் காரியத்திறனையும் உற்பத்தி பெருக்கத்தையும் மேம்படுத்த கோரல், அம்பாறை மாவட்ட வெளிக்கள கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு கடந்த ஆட்சியின் போது மறுக்கப்பட்டுள்ள சலுகை விலை அடிப்படையிலான மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டத்தை 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவில் உறுதிப்படுத்த கோரல், வடக்கு கிழக்கில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கென தனியான வீடமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரல்.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அமைய, தற்காலிக மற்றும் பதிலீட்டு ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கோரல். திறமை அடிப்படையிலான பதவி உயர்வு - போட்டி பரீட்சை முறமையை மீள ஏற்படுத்தக் கோரல், அரசாங்க முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு உத்தியே-ாகத்தர்களை எம் என் 4 சம்பள அளவு திட்டத்தில் அமர்த்துவதோடு, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் தொழிற்தகைமையைமேம்படுத்தும் வகையில் முகாமைத்துவ பயிற்சி நிலையம் ஒன்றே ஏற்படுத்த கோரல், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மேற்பார்வை தரத்திலான சுப்ரா தர பதவி அணியினை ஏற்படுத்தக் கோரல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள்அமைச்சர்,வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் , தாபன பணிப்பாளர் நாயகம், வரவு - செலவுத் திட்டப் பணிப்பாளர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 200 ஆண்டுகள் பழைமையான வேப்பமரம் சரிந்ததால் மின்சாரம் தடைப்பட்டுள்ளது

யாழ்.சாவகச்சேரி நகரிலிருந்த 200 ஆண்டுகள் பழைமையான வேப்பமரம் ஒன்று நேற்று திடீரென மின்சாரக் கம்பங்கள் மீது வீழ்ந்ததில் அப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

இதேவேளைகுறித்தபகுதியில்இருந்த பெட்டிக்கடையொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் இதன்போது சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



# ரயிலுடன் ஓட்டோ மோதியது ஏறாவூரில் ஒருவர் உயிரிழப்பு

மட்டு. ஏறாவூர் பிரதேசத்தில் ரயிலுடன் ஓட்டோ ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏறாவூர் ஜின்னா வீதி ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட ஓட்டோவே இவ்வாறு மட்டக்களப்பில் இருந்து பொலன்னறுவை நோக்கி சென்ற ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவர் ஏறாவூரைச் சேர்ந்த 39 வயதுடைய அப்துல் ரஹ்மான் ரமிஸ் எனத் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்துசடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட் டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# வடமாகாண சட்டத்தரணிகள் நேற்றுக் காலை முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக போராட்டம்



















முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜாவிற்கு இழைக்கப் பட்ட அநீதிக்கு எதிராக வடக்கு மாகாணங்களிலுள்ள சட்டத்தரணிகள் இணைந்துமாபெரும்எதிர்ப்புப்பேரணிம ற்றும்ஆர்ப்பாட்டத்தில்நேற்று ஈடுபட்டனர்.

காலை 11மணியளவில்முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாகத் தொடங்கி பேரணியாக முல்லைத்தீவு நகர சுற்று வட்டத்தையடைந்து மீண்டும் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக நிறைவுபெற்றது. அங்கு கண்டன ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

நீதித்துறை மூலம் நீதியான சட்டவாட்சியை நடைமுறைப்படுத்து-வதைத் தடுக்காதே, கௌரவ நீதிபதிகளின் கடமையில்தலையிடாதே, நீதி அமைச்சரே அநீதிக்கு துணை போகாதே, நீதிபதிகளின் பாதுகாப்பை குறைக்காதே, நீதித்துறையை சுயாதீனமாக செயற்படவிடு, கௌரவ நீதி பதிகளே சட்டத்தரணிகளாகிய நாங்கள் உங்களுடன், நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாப்போம் போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை சட்டத்தரணிகள் தாங்கியிருந்தனர்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வடக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கங்களின் சட்டத்தரணிகளும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டச் சட் டத்தரணிகள் குறித்த விடயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் இரண்டு வாரத்திற்கு கறுப்பு நிற முகக்கவசம் அணிந்து கடமையில் ஈடுபட இருப்பதாக தெரிவித்திருந்தனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் கால வரையறையின்றி தொடர் நீதிமன்ற புறக்கணிப்பினை மேற்கொள்வதோடு முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினைச் சார்ந்த அனைவரும் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகாது தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிப்பார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒலுவில் சட்டத்தரணிகளும் போராட்டம்








(கே எ ஹமீட்)

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் இன்று பொத்துவில் மாவட்ட நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நீதிபதி அச்சுறுத்தப்பட்டமை குறித்து சுயாதீன விசாரணை வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

# கல்முனையிலும் சட்டத்தரணிகள் போராட்டம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கையின் நீதித்துறை மற்றும் அதன் சுயாதீன தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த கவன ஈர்ப்புப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் கல்முனை நீதிமன்ற கட்டடத்திற்கு முன்னால் நேற்றுக் காலை நடைபெற்றது.

இலங்கையின் நீதித்துறையின் சுயாதீன தன்மை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவது நீதித்துறையைக் கேள்விக்குட்படுத்தும் ஒரு செயற்பாடாகும், இதனைத் தடுக்கும் முகமாக நாம் இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம் என்றார் போராட்டத்தில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.ஹைகல் ஹாதி. அவர் மேலும் தெரிவித்ததாவது,

நீதித்துறையில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவது மற்றும் அடக்கி வாசிக்க எடுக்கப்படும் முயற்சிகள் நிறுத்தப்படவேண்டும். நாடாளுமன்ற சிறப்புரிமையை வைத்து நீதித்துறையும்நீதித்துறைசார்ந்தவர்களையும் நாடாளுமன்றத்தில் கடந்த காலங்களில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தடுக்கும் முகமாக கௌரவ சபாநாயகர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று நாடாளுமன்றத்தில் உரையாற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நீதித்துறைக்கும் சட்டவாக்கத் துறைக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்காகவே இன்று நாம் குரல் கொடுத்து கொண்டிருக்கின்றோம். நீதித்துறை சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத் துறை என்பன அதற்குரிய சுயாதீனத் தன்மையோடு தொடர்ந்தும் செயல்படுவதற்கு இடமளிக்கப்படவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகல் குறித்து சுயாதீனமான புலன் விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இதற்கென சுயாதீன ஆணைக்குழு ஒன்றை நிறுவி முழுமையான விசாரணையை மேற்கொண்டு அறிக்கையை வெளியிடவேண்டும் என்றும் நாம் வினயமாக கேட்டுக் கொள்கிறோம் -என்றார்.

# 2 வீதமாகவுள்ள தொழில்முனைவோரை 5 ஆண்டுகளில் 10 வீதமாக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

இலங்கையின் மக்கள் தொகையில் தொழில்முனைவோர் சுமார் 2 சதவீதம் மாத்திரமே உள்ளனர். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அந்த எண்ணிக்கையை 10 சதவீதமாக உயர்த்தவேண்டும் என்று சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தநாட்டில்தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பெரும் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்னிடம் வழங்கினார். நமதுபாரம்பரியதொழில்முயற்சியாளர்களைப் பாதுகாத்து தொழில்முனைவோராக அவர்களை உருவாக்கும் பணியில் நாம் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும், நம் நாட்டின் பல்கலைக்கழகங்களில் இருந்து ஏராளமான இளைஞர், யுவதிகள் பட்டம் பெற்று வெளியேறுகிறார்கள். ஆனால் அவர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் வாய்ப்பு மிகவும் குறைவு.

அவர்களில் அதிகமானோர் தொழிற்படையினர் என்ற வட்டத்திற்குள்ளே தங்கிவிடுகின்றனர். இவ்வாறு பட்டம் பெறுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் தொழில்முனைவோராகும் வாய்ப்புக் கிடைத்தால், அது நாட்டுக்கு பெரும் பலமாக அமையும். இதன் காரணமாக, நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்குஅவர்களின்பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நிலைபேறான அபிவிருத்தி மூலம் சூழல்நேய தயாரிப்புகளுக்கு சர்வதேச சந்தையில் பெரும் கேள்வி உள்ளது. மேலும், உலகம் பூராகவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்புகளை நுகரும் போக்கு காணப்படுகிறது.

பங்களாதேஷ் ஏற்கனவே பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில், உலக சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில்போது, பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்வது அவசியமாக உள்ளது. அந்தப் பொருட்களுடன், ஏற்றுமதி சார்ந்த பொருட்களையும்உற்பத்திசெய்யவேண்டும்.

உலகச் சந்தையின் கேள்விக்கு ஏற்ப இத்தகைய பொருட்களைத் தயாரித்தால் நாட்டுக்குக்கிடைக்கும்அந்நியச்செலாவணியின் அளவு அதிகரிக்கும். இந்த அமைச்சின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை, லக்சல போன்ற நிறுவனங்கள் உள்ளன. இதன் மூலம் நவீன உலகுக்கும் நாட்டுக்கும் ஏற்ற வகையில் புதிய தயாரிப்புகளை உருவாக்க முடியும்.

நம் நாட்டிற்கு தனித்துவமான வடிவமைப்புகளை உருவாக்குவதில் கிராமங்கள் உள்ளன. அவர்களுக்கு முறையான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் மூலம், அவர்களை புதியதொழில்முனைவோராகமாற்றும்வாய்ப்பு உள்ளது. ஆட்சியாளர்கள் என்ற வகையில் அந்த இலக்கை அடைவதற்கு செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஒரு பொருளை உற்பத்தி செய்வதால் மட்டும் உலகை வெல்ல முடியாது. போட்டி நிறைந்த உலகை எதிர்கொள்ளும் வகையில் புதிய தயாரிப்புகள் உருவாக்கப்படவேண்டும். சார்ந்திருக்கும் மனப்பான்மையிலிருந்து விடுபட்டு சுயமாக எழுந்து நிற்கும் தேசமாக மாற வேண்டும்.

நாம் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அந்த உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகரும் பயணம் நமது அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் மூலம் அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப செயல்பட திட்டமிட்டுள்ளோம்.

சர்வதேச சந்தையை வெற்றிகொள்ள, நம் நாட்டில் சில சட்டங்கள் மாற்றப்பட வேண்டும். குறிப்பாகசிலதடைகள்தொடர்பாக, சுற்றுச்சூழல் அமைச்சு உட்பட பல அமைச்சுக்களால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டங்கள் மாற்றப்படவேண்டும். புதிய தொழில்முனைவோரை உருவாக்குவதில், அவர்களின் பொருட்களை உற்பத்தி செய்ய தேவையான மூலப்பொருட்கள் தடையின்றி வழங்கப்படவேண்டும்.

அத்துடன் இந்நாட்டில் பெருமளவிலான இளைஞர்கள் முச்சக்கரவண்டி சாரதிகளாக தொழில் செய்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடியில் இருந்து அவர்களை மீட்டெடுக்க இரண்டாவது நிலை தொழில் வாய்ப்புகளை உருவாக்கவேண்டும். இதற்கு, நீர்க்குழாய் பழுதுபார்த்தல், மின்சார தொழில்துறைப் பயிற்சி போன்ற தொழில்முறை பயிற்சிகளை வழங்க முடியும்

மேலும், தற்போது வங்கி வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளதன் காரணமாக கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. மக்கள் தொகையில் தொழில்முனைவோர் சுமார் 2 சதவீதம் மாத்திரமே உள்ளனர். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அந்த எண்ணிக்கையை 10 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

இதன் மூலம் இந்த ஆட்சி எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு அவர்களின் ஆதரவைப் பெற முடியும். நமது நாட்டில் அறிவுசார்ந்த மனித வளம் உள்ளது. தேசிய உற்பத்தியை அதிகரிக்கவும் பொருளாதாரத்தைவலுப்படுத்தவும்அவர்களின் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்படவேண்டும் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2023இல் வெளியிடப்பெற்றது.